விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 05 புதன்கிழமை (17.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 60

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரினால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் அந்த உறுப்பினர்கள் சாதாரண குடி மக்கள் எனப் பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டினார். பொதுத் தேர்தல் முடிபடைந்த பின்னர் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் பாதுகாப்பு அதிகாரிகளை வழங்கப் பொலிஸ்மா அதிபரினால் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த தேரர்களின் மாநாடு ஒத்திவைக்கப்படுவதாக அறிவிப்பு

(கொழும்பு)

கண்டியில் நாளை நடைபெறவிருந்த பௌத்த தேரர்களின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

காலவரையறையின்றி குறித்த சங்க சம்மேளனக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்படுவதாகக் கண்டி மல்வத்த , அஸ்கிரிய மற்றும் ராமன்ய பீடாதிபதிகள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கண்டி மகா மலுவலவில் இந்தக் கூட்டத் தொடர் நடத்தப்படவிருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் பௌத்த பிக்குகளின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ தலதா மாளிகையின் கௌரவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளை இரத்துச் செய்யக் கோரி மனு!

## இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகம் அற்ற முறையில் நடந்தது

### பொதுநலவாய அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முழுமையாக ஆராயும்போது அது ஜனநாயகமற்ற தேர்தல் எனத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு இலங்கை வந்த பொதுநலவாய அமைப்பு தமது இறுதி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயக நடைமுறைகளின் பலவற்றை மீறியிருந்தது. தேர்தல் நடைபெற்ற நாள் ஓரளவு அமைதியாக இருந்தபோதும் தேர்தலுக்கு முன்னரான காலப் பகுதி மிக (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா தாக்கல் செய்தார்



(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கம் பாரிய மோசடிகளை மேற்கொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சிகளின் வேட்பாளராகப் போட்டியிட்ட சரத் பொன்சேகா சார்பில் நேற்று உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தலின்போது வாக்கு எண்ணிக்கையிலும் தேர்தல் முடிபுகள் அறிவிப்பிலும் கணனி உபயோகத்திலும் மோசடிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவை அச்சுறுத்தி தமக்கு சார்பான முடிபுகளை அறிவிக்குமாறு கூறி மகிந்த வெற்றி பெற்றுள்ளார் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் கொல்லப்பட்ட போதிலும் தமிழீழக் கோட்பாடு அழியவில்லை



### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட்ட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டபோதும் தமிழீழக் கோட்பாடு இன்னும் அழியவில்லை என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜகத் ஜெயசூரிய கிழக்குப் பகுதியில் உள்ள கல்லடி , தொப்பிகல , வாகரை , புனானை இராணுவ முகாம்களுக்குக் கடந்த வாரம் விஜயம் செய்திருந்தார்.

அப்போது அவர் இராணுவ வீரர்கள் மத்தியில் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது ,

விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் இன்னமும் தமிழீழம் குறித்து விவா (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் செயலர் இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இந்தியாவின் பாதுகாப்பு தரப்பின் முக்கியஸ்தர்களை அவர் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெறும் தெற்காசியாவின் மிகப்பெரிய ஆயுதத் தளபாட கண்காட்சியாகிஃடிபெக்சோவினையும் கோத்தபாய ராஜபக்ஷ பார்வையிட்டுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்புக்களை நவீன (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அரசியல் குழப்ப நிலை; கவலையில் இந்திய அரசாங்கம்!

### டில்லி இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்


(புதுடில்லி)

இலங்கையில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையில் தொடரும் முறுகல் நிலை குறித்தும் இதன் விளைவாக நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை பற்றியும் இந்தியாவின் மத்திய அரசு மிகுந்த கவலையடைந்துள்ளதாக டில்லி இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த மற்றும் பொன்சேகா என்ற தெரிவில் யாரை ஆதரிப்பது என்ற நிலை வந்தபோது பொன்சேகாவை விட மகிந்தவுக்கே ஆதரவு என்ற நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருந்தபோதும் தற்போது மகிந்த மேற்கொண்டு வருகின்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் கைதானால் உடனடியாக அறிவிக்க வேண்டும்

### ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் எதிர்வரும் காலங்களில் கைது செய்யப்படும் சந்தர்ப்பம் எழும் போது எமக்குத் தெரியப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோது ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் , (16 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூரில் விடுமுறைச் சந்தை யாழ்.மாநகர சபை நடவடிக்கை

நல்லூரில் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் கூடும் விடுமுறைச் சந்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கு யாழ்.மாநகரசபை முன்வந்துள்ளதாக முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த காலங்களில் அதிகளவு விலை கொடுத்து கொள்வனவு செய்யப்பட்ட பல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்கள் ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தென்பகுதியிலிருந்து யாழ்.நகருக்குக் கொண்டுவரப்பட்டு மிகவும் மலிவான விலையில் நகரின் பல பாகங்களிலும் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அவ்வாறான வியாபாரத்தை மையப்படுத்தி மக்கள் தமக்குத் தேவையான சகல பொருட்களையும் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ளுவதற்காகவும் யாழ்.நகரின் மத்தியில் தற்போது அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்காகவும் நல்லூரில் ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் கூடும் விடுமுறைச் சந்தையை விரைவில் ஆரம்பிப்பதற்கு மாநகரசபை முன்வந்துள்ளது.

மாநகரசபையின் நல்லூர் இந்துவிடுதிக் கட்டிடத்தின் பின்புறமுள்ள கடைகளுக்குப் புறமுள்ளதும், பிராமணக்கட்டுக் குளத்தின் அருகாமையிலுள்ளதுமான பரந்த வெற்றுக் காணியில் ஞாயிறு சந்தை விரைவில் உருவாக்கப்படவுள்ளது. நாளாவட்டத்தில் இவ்விடத்தில் நெருக்கடி ஏற்படுமிடத்து இவ் விடுமுறைச் சந்தையை நல்லூர் சூழலிலுள்ள வேறு இடங்களுக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சந்தையில் வியாபாரம் செய்யவிரும்பும் வர்த்தகர்கள் முன்கூட்டியே தமது பெயர் விபரங்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தெரிவித்தார். (ச)

# லங்கா பத்திரிகையின் ஆசிரியர் நீதிமன்றத்தால் நேற்று விடுதலை

பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த லங்கா பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த எவ்வித குற்றச்சாட்டுக்களோ, பிணையோ, நிபந்தனைகளோ விதிக்கப்படாமல் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஜனவரி 29ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட சிறிமல்வத்த, பாதுகாப்புச் செயலாளரின் மூன்று மாத தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று கங்கொடவில நீதிமன்ற நீதவானின் முன்னிலையில் இரகசியப் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்டார்.

பாதுகாப்புச் செயலாளரின் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் சிறிமல்வத்த சிறைவைக்கப்பட்டதால் அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டதாகவும் எனவே அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அண்மையில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற அரசாங்க ஊடகங்களின் தலைவர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட அரச சார்பற்ற நிறுவனமொன்றின் தலைவர், சிறிமல்வத்த தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறித்து ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கலந்துகொண்ட ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் எந்தக் காரணத்திற்காக லங்கா பத்திரிகையின் ஆசிரியர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனக் கேட்டுள்ளார்.

லங்கா பத்திரிகையின் ஆசிரியர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை தான் அறிந்திருக்கவில்லையென ஜனாதிபதி நேரடியாக பதிலளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச)

## வெளிவாரி பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2005க்கு பின்னர் பட்டம் பெற்று வெளியேறிய யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே வெளிவாரிப்பட்டதாரிகளை 077 9042390, 077 9084238 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ச)

## மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவத்துறையின் மூலிகை விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை காலை 10.30க்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) விவியன் சத்தியசீலனால் இக்கருத்தரங்கு நடத்தப்படும். 2ம் வருட சித்தமருத்துவ மாணவர்களும் இக்கருத்தரங்கில் இணைந்து செயற்படுவார்கள். (ச)

## ரிதிரேகா சான்றிதழுக்கு பத்து இலட்சம் பரிசு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் கொள்வனவு செய்யப்பட்ட ரிதிரேகா சான்றிதழுக்கு 62வது சீட்டிழுப்பில் முதலாவது பரிசான 10இலட்சம் ரூபாய் கிடைத்துள்ளது.

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரே இப்பரிசை பெற்ற அதிர்ஷ்டசாலி ஆவார். (ச)

## பெப்ரவரி மாதத்துக்கான நிவாரணம் விநியோகம்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வருகைதந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு பின்னர் தமது சொந்த இருப் பிடங்களுக்கு விடுவிக்கப்பட்ட மக்களுக் கும், 11.08.2006இன் பின் இடம்பெயர்ந்த மக்களுக்குமான பெப்ரவரி மாதத்தின் உணவு விநியோகத்திற்கான வழங்கற் கட்ட ளைகள் சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் இன்று முதல் வழங்கப்படவுள்ளது.

எனவே ப.நோ.கூ. சங்கங்கள் அன்றைய தினமே ஜனவரி மாத உணவு விநியோகத் தின் முன்னேற்ற அறிக்கையினைச் சமர்ப்பித்து வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் உடனடியாக விநியோக நடவடிக்கைகளை ஆரம்பித்து 10.03.2010 உடன் விநியோக நடவடிக்கைகளை முடிபுறுத்துமாறும் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். இவ் விநியோகத்திற்கான உணவுப் பொருட்களை களஞ்சியங்களில் இருந்து 17.02.2010முதல் 24.02.2010 வரை பெற்றுக்கொள்ள முடியுமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## பேசும் படம்



இது விளம்பரப் பலகையா!....


## கண்ணீர் அஞ்சலி



இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவு பிரிவு தலைவரும் யாழ். கிளை ஆளுநர் சபை உறுப்பினர் எட்வேட் அருந்தவசீலன் (சீலன்) அவர்களின் அன்புத் தந்தையார்

நாகேந்திரர் மனுவேற்பிள்ளை எட்வேட் J.P

அவர்கள் இறைபதம் அடைந்தமையையொட்டி அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவை சங்க சண்டிலிப்பாய்ப் பிரிவு


## மரண அறிவித்தல்

## சண்முகராசா சந்திரமோகன்



கோகுல வீதி, உரும்பிராய் மேற்கை பிறப்பிடமாகவும் 8ஆம் வட்டாராம் மந்துவில் புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா சந்திரமோகன் 13.02.2010 அன்று இறைபதமடைந்து விட்டார்.

இவர் வயித்தி சண்முகராசா செல்வராணி ஆகியோரின் அன்புப் புதல்வனும் கேமலதா (கேமா) வின் அன்புக் கணவரும், குபிதரனின் அன்புத் தந்தையும்,

சசிகுமார், சசீலா, சந்திரகலா, சசிகாந்தன் (சுது) (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும், ஜயன் செல்வகுமார், சசிகுமார், அனுசியா, திருமேனி திலீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்வராசா அன்னை மேரியின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 17.02.2010 (புதன்) இன்று காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(436)

## 'விருட்சம்' சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான விருட்சம் சஞ்சிகையின் 10வது இதழ் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக வணிகதுறை விரிவுரை மண்டபம்-1இல் நாளை வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.க.அருள்வேல் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-14)

## தவறிவிட்டது

35, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியைச் சேர்ந்த மரியதாஸ் றொனிமைக்கல் என்பவரது தே.அ.அ. (843233473V), சாரதி அனுமதிப்பத்திரம் (A 0178 82741) 04.02.2010 அன்று கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும்.

(438)


கோகுல் ரவல்ஸ் Hokul Travels

திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)



## கண்ணீர் அஞ்சலி

## சிவபாக்கியம் கந்தையா



எமது கல்லூரி அதிபர் இ.பாலகுமார் அவர்களின் பாசமிகு மாமியார் திருமதி சிவபாக்கியம் கந்தையா அவர்கள் இயற்கை மரணம் எய்தியமையையிட்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூறவு மன்றம்
யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு.

(C-4455)

# இன்று ஒரு தகவல்

## குருவைத் தேடி...

ஓர் ஊரில் ஓர் இளைஞன் இருந்தான்.

ஒருநாள் அவன் ஒரு குருவைத் தேடிப் புறப்பட்டான்.

ஊரைவிட்டு வெளியே போனான். போகும் வழியில் ஒரு காடு... அந்தக் காட்டில் ஒரு மரத்தடியில் ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

அமைதியாக, மௌனமாக அவர் அமர்ந்திருந்தார். இந்தப் பெரியவரை விசாரிக்கலாம். குருவைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு இவர் ஏதாவது ஒரு வழி சொல்லிக் கொடுப்பார் என்று நினைத்துக் கொண்டு அவரை நெருங்கினான்.

"ஐயா...,எனக்கு ஒரு குருதேவை... எங்கே கிடைப்பார்? அவரை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பது? அவரைப்பற்றி ஏதாவது விபரம் சொன்னீர்களானால் நான் கண்டுபிடித்து விடுவேன்'' என்றான்.

பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"தம்பி! அது ரொம்ப சுலபம். அவர் வயதானவராக இருப்பார். என்னைவிட சுமார் முப்பது வயது அதிகமாக இருக்கும். அவர் ஒரு மரத்தடியில் தான் உட்கார்ந்திருப்பார்''

"சரி... பெரியவரே... அது என்ன மாதிரியான மரம்... எப்படி இருக்கும்?''

பெரியவர் அந்த விபரங்களையும் சொன்னார். அதுமட்டுமல்ல... சந்திக்கும் நாள்,நேரம்,விநாடி முதற் கொண்டு எல்லா விபரங்களையும் துல்லியமாகச் சொன்னார்.

இவ்வளவு விபரங்களை இவரால் எப்படி சொல்ல முடிகிறது? இளைஞனுக்கு வியப்பு.

இருந்தாலும் அந்தப் பெரியவர் கடைசியாக ஒரு விபரம் சொன்னார். அது என்ன தெரியுமா?

"எப்படியும் நீ அவரைச் சந்திப்பதற்கு 30 ஆண்டுகள் ஆகும்'' என்று சொல்லிவிட்டார்.

''ரொம்ப நன்றி பெரியவரே!'' என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் புறப்பட்டான்.

இப்பொழுது அவனுக்கு குரு பற்றிய விபரம் எல்லாம் கிடைத்து விட்டது. சந்திக்கும் நேரமும் தெரிந்துவிட்டது. ஆனால் 30 வருடங்கள் அவரைத் தேடி அலைய வேண்டியிருக்கும்.

அவன் தேட ஆரம்பித்தான்.

காடு,மலையெல்லாம் சுற்றியலைந்தான். பல வருடங்கள் தேடினான். கடைசியில் அலுத்துப் போய்விட்டான். அவனுக்கும் வயதாகிவிட்டது.

கடைசியில் தன்னுடைய சொந்த ஊருக்கே திரும்பிப் போய்க்கொண்டிருந்தான்.

அங்கே ஒருமரத்தடியில் அவன் தேடிக் கொண்டிருந்த குருநாதர் கிடைத்தார்.

30 வருடங்களுக்கு முன் வழி சொல்லிக் கொடுத்தாரே அதே பெரியவர் தான்.

அவருக்கு இப்பொழுது 30 வயது அதிகமாகியிருந்தது. அதேமரம் அன்றைக்குப் பெரியவர் சொன்ன அடையாளம் இப்பொழுது பொருத்தமாகியிருந்தது. இப்பொழுது அந்தப் பெரியவர் சொன்னார்.

"சரியாக வந்து சேர்ந்து விட்டாய். வா உனக்காகத்தான் நான் இவ்வளவு காலமும் காத்துக் கொண்டிருந்தேன்.'' "என்ன சொல்றீங்க?''

"முப்பது வருடத்துக்கு முன் என்னிடம் வந்தாயே... அப்பொழுதே என்காலம் முடிந்து போயிருந்தது. அப்பொழுது என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லை. அதனால் இவ்வளவு காலம் உனக்காகக் காத்திருக்க வேண்டியதாகிவிட்டது''. "ஐயா அப்பவே நீங்கள் நான் தான் உன் குரு என்று சொல்லியிருக்கலாமே...''

அதற்கு அந்தப் பெரியவர் சிரித்துக் கொண்டே இதற்குப் பதில் சொன்னார்.

"நான் எவ்வளவோ விபரமாகத்தான் சொன்னேன். நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அப்பொழுது நீ போதுமானளவு பக்குவம் பெற்றிருக்கவில்லை. அதனால் புரியும் சக்தி இல்லாமல் போய்விட்டது. ஆனால் இப்பொழுது உனக்கு அந்தப் பக்குவம் வந்துவிட்டது. அதனால் தான் அடையாளம் காண முடிந்தது. நானே உன் குரு''என்றாராம். இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஆன்மீகத்தில் மாணவனாகச் சேருவதற்கே ஒரு பக்குவத் தன்மை வேண்டும்.

ஒரு பெரிய ஞானி.

அவரிடம் சீடனாக சேர்வதற்கு ஒருவன் வந்தான். எதிரில் நின்றான்.

ஞானி அவனைப் பார்த்து,

"சீடனாக இருப்பது மிகவும் சிரமம்'' என்றார்.

"நான் தயாராக இருக்கிறேன்.''

"இங்கே குருவாக இருப்பது மட்டுமே சுலபம்''

"அப்படியானால் நான் குருவாகவே ஆகிவிடுகிறேன்.''

இதுபோலவே இந்தக்காலக் கதை ஒன்றுண்டு.

ஒரு பள்ளிக்கூடத்தில் வகுப்பு நடந்து கொண்டிருந்தது.

ஆசிரியர் ஒரு மாணவனைத் திட்டினார்.

"டேய்... நீ நூற்றுக்குப் பத்து மார்க் வாங்கியிருக்கிறாய்.

இப்படியே போனால் மாடு மேய்க்கக் கூட லாயக்கில்லாதவனாகிவிடுவாய்... அதன் பின் என்ன செய்யப் போகிறாய்?''

பையன் தலையைச் சொறிந்து கொண்டே, "சேர் அப்படியானால் ஒன்று செய்கிறேன்''

"என்ன செய்கிறாய்?''

உங்களைப் போல் ஒருவாத்தியராகி விடுகிறேன்'' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாகாண மட்ட பேடன்பவல் தின போட்டிகளில் வெற்றிபெற்றோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சாரணர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மாகாணமட்ட பேடன் பவல்தின போட்டி முடிவுகள் வடமாகாண சாரண ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

### கட்டுரைப் போட்டி

**குருளைச்சாரணர்**

(7-9 வயது ஆண்)

நி.தரஞ்ஜன் (இ.மெ.ம.வி), எறேன் மெல்வின் கிறேசி, க.தசாங்கன்(பன்னாலை சேர் கனகசபை வித்தி.)

(7-9 வயது பெண்)

ஜெ.பிரியங்கா (பன்னாலை சேர் கனகசபை வித்தி.),சி. தேனுஜா (மகாஜனாக் கல்லூரி), சி.வைஸ்ணவி (இணுவில் மத்திய கல்லூரி)

(10-11 வயது ஆண்)

தி.கிரிதரன் (சங்கானை சிவப்பிரகாச ம. வி) , ஆர். ஜோய்பிரவீன், ந.பகீர்ராஜ் (பன்னாலை சேர் கனகசபை வித்தி.)

(10-11 வயது பெண்)

சி.சுயந்தினி, லோ.துளசிகா (மகாஜனாக் கல்லூரி), மூன்றாமிடம் மூவர் - வ.டீலானி (சண். இந்துக் கல்லூரி), கி.நிதுஷா (மகாஜனாக் கல்லூரி), பொ.பிரக்ஷனா (பன்னாலை சேர் கனகசபை வித்தி.)

**சாரணர்**

(12-15 வயது ஆண்)

கை.சுரேன் (வட்டு இந்துக் கல்லூரி, அ.தர்சிகரூபன் (இணுவில் மத்திய கல்லூரி), த. ஜெயலன்.

(12-15 வயது பெண்)

க.சிவகாயத்திரிநாயகி (மகாஜனாக் கல்லூரி), ரா.அறிவழகி, கு.கிருஷாந்தினி (திரு.முத்து. ம.வி),

(16-18 வயது ஆண்)

போ.கஜிபன் (மூளாய் சைவப் பிரகாச வித்தி), இரண்டாமிடம் இருவர்-சி.விஜிதரன் (யாழ் இந்துக்கல் லூரி), கு.கோபி ராம் (மகாஜனாக் கல்லூரி

(16-18 வயது பெண்)

இ.கோகிலராணி, ஜெ.தர்சனா, த.கஜானா (மகாஜனாக் கல்லூரி)

**திரிசாரணர்**

(19-25 வயது)

பா.கேகயன், கு.யுவர்னன், சி.இராகுலன் (மாகாஜனாக்கல்லூரி)

**குருளைச் சாரணத் தலைவர்**

(18 வயதின் மேல் ஆண்/பெண்)

ஜே.ஜீவமலர் (மூளாய் சைவப்பிரகாச வித்தி.), சி.சண்முகதேவி (இ.மெ. ம.வித்தி),

**சாரணத் தலைவர்**

(18 வயதின் மேல் ஆண்/பெண்)

சோ. கிருஸ்ணதாஸ் (யாழ்.இந்துக் கல்லூரி)

### புதிர்ப்போட்டி

**குருளைச்சாரணர்**

(7-9 வயது ஆண்)

முதலாமிடம் இருவர்-ர.தபேந்திரன், வி.சத்தியப் பிரகாஷ், ச.லக்ஸன் (மகாஜனாக் கல்லூரி)

(7-9 வயது பெண்)

சி.தேனுஜா, ஸ்ரீ.சங்கீதா, ஜெ.ரேகா (மகாஜனாக்கல்லூரி),

(10-11 வயது ஆண்)

தி.கிரிதரன் (சங்கானை .சைவப் பிரகாச ம.வி), இ.பெனஜா (இ.மெ. ம.வி), த.ரேனுஜன் (மகாஜனாக் கல்லூரி),

(10-11 வயது பெண்)

க.ரேணுஜா (மகாஜனாக் கல்லூரி), அ.நவோமியா (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), உ.மோவினா (மகாஜனாக் கல்லூரி),

**சாரணர்**

(12-15 வயது ஆண்)

ச.அபிராம் (மகாஜனாக் கல்லூரி),த.ஐங்கரன் (திரு.மு.ம.வி),மு.தர்சிகன்(சென் ஜோன்ஸ் கல்லூரி),

(12-15 வயது பெண்)

க.சிவகாயத்திரி நாயகி (மகாஜனாக்கல்லூரி), ச.ஜஸ்ரினா (திரு. முத்து ம.வி), ஜெ.திவ்விஜா (மகாஜனாக் கல்லூரி),

(16-18 வயது ஆண்)

க. சுஜிபன், சி.விஜிதரன் (யாழ். இந்துக் கல்லூரி), கு.திருரங்கன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),

(16-18 வயது பெண்)

இ.நிருஜா,ம.சுரேக்கா, த.கஜானா, (மகாஜனாக் கல்லூரி)

**திரிசாரணர்**

(19-25 வயது)

கு.யுவர்னன்,பா. கேகயன் (மகாஜனாக்கல்லூரி)

**குருளைச் சாரணத்தலைவர்**

(18 வயதின் மேல் ஆண்/ பெண்)

சி.சண்முகதேவி (இ.மெ.ம.வி), கு.குணசீலன் (சங்கானை ஸ்தான அ.மி.த.க.பா),

**சாரணர் தலைவர்**

(18 வயதின் மேல் ஆண்/பெண்)

சோ. கிருஸ்ணதாஸ் (யாழ். இந்துக்கல்லூரி). (6-4)



வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெற்ற தரம் -6 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா வாழ்த்துரை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*17-02-2010 (மாசி 5,புதன்கிழமை)*
*திருதியை பிற்பகல் 1.44 மணிவரை*
*உத்தரட்டாதி பின்னிரவு 1.31 மணிவரை*
*இராகுகாலம் 12.33-2.03 மணிவரை*
*சுபநேரம் 5.03- 6.33 மணிவரை*
*மந்திகை கண்ணகை அம்மன் தீர்த்தம், ஊரெழுப்பிள்ளையார் ,கீரிமலை முத்துமாரியம்மன் கொடி, விபூதிப் புதன்.*

| | |
|---|---|
| மேடம் | அதிக பிரயாசை, பெரியோர் உதவி , சுபகாரியம், பிரயாண நன்மை. |
| இடபம் | நற்கீர்த்தி, நிலைமாற்றம், தன லாபம், காரிய நன்மை. |
| மிதுனம் | கடின முயற்சி, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், அதிகாரம். |
| கடகம் | கட்டுப்பாடு, தொழிலில் ஆர்வம், பிரயாண நன்மை, வீண்பயம். |
| சிங்கம் | வீண்பகை, காரிய தாமதம், பணக் குறைவு, மரியாதைக் குறைவு. |
| கன்னி | காரிய நன்மை, தெய்வ சிந்தை, பொருள் சேர்க்கை, பாராட்டு. |
| துலாம் | செய்தொழில் நன்மை, ஜன வசியம், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| விருச்சிகம் | ஆரோக்கியக் குறைவு,கௌரவக் குறைவு, முயற்சி தாமதம், மனச் சஞ்சலம். |
| தனுசு | தாய்வழி உறவு, தொழில் நன்மை, காரியதாமதம், பயணம். |
| மகரம் | வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு, தனவிரயம், பிரயாண சுகம். |
| கும்பம் | அமைதிக் குறைவு, தனவிரயம், வேலைச்சுமை, காரியதாமதம். |
| மீனம் | தன்னம்பிக்கை, நண்பர்கள் வருகை, காரிய சித்தி, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 120 |
| தக்காளி | 90 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 50 | 70 | 50 |
| கரட் | 120 | 130 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 60 | 80 | 50 |
| வாழைக்காய் | 25 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக்கிழங்கு | 20 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 110 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 80 |
| பீற்றூட் | 70 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 320 | 400 |
| போஞ்சி | 80 | 90 | 120 |
| கத்தரி தம்புள்ள | 25 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |




வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தடகள விளையாட்டு விழாவில் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் உரையாற்றுவ்தையும் விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

## புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச சபையினால் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான சமாசன பொதுக்கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும் அண்மையில் பிரதேச சபை செயலாளர் என். குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக கு. குணசிங்கம் (உடுப்பிட்டி நாவலடி சனசமூக நிலையம்), செயலாளராக கு. மகாலிங்கம் (கரவெட்டி இளங்கோ சனசமூக நிலையம்), பொருளாளராக ந. தங்கவேல் (வல்வெட்டித்துறை கருணாநிதி சனசமூக நிலையம்), உப தலைவராக எஸ். செல்வதீபன் (அல்வாய் இளைஞர் சனசமூக நிலையம்), உப செயலாளராக க.பரஞ்சோதி (அல்வாய் பாரதி சனசமூக நிலையம்) ஆகியோரும் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (6-4 24)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் உதவிப் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஏழாலை மத்தி ஜே/206 கிராம அலுவலர் சி.பத்மநாதன், ஓய்வு பெற்ற அதிபர் செ. ஞானச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய முதன்மை ஆசிரியர்களான க.சிவராசா, திருமதி கோ.குணபாலசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (6-4)

✠ ✠ ✠

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா வடக்கு பிரதேச செயலக கணக்காளர் ம.சிவகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை ப.நோ. கூட்டுறவுச் சங்க தலைவர் ச.தனபாலசிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

✠ ✠ ✠

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் வி.மு. பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மா. இளம்பிறையன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-29)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சங்குவேலி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சங்குவேலி பூந்தோட்டம் அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக மன்றச் செயலாளர் ப.மகேந்திரதாசன் தெரிவித்துள்ளார். (6-4)

## சமுர்த்தி நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்பட்டு வரும் ஜனவரி மாதத்திற்கான சமுர்த்தி நிவாரண விநியோகம்நாளை வியாழக் கிழமையுடன் முடிவடைவதால் நிவாரணத்தை இதுவரை யில் பெறாதவர்கள் அந்தந்தப்பகுதியில் உள்ள சங்கக்கிளைகளில் உடனடியாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (6-30)




## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக திணைக்களங்கள் மற்றும் பொதுசன நிலைய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என நிர்வாக உத்தியோகத்தர் வி. சிவகொடி தெரிவித்துள்ளார். (6-29)

## பஸ் தரிப்பு நிலையம் திறப்பு

(சாவகச்சேரி)

வரணி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் அமரர் செல்லையா ஜயந்தனின் ஞாபகார்த்தமாக கட்டப்பட்ட பஸ்தரிப்பு நிலையம் பருத்தித்துறை சாலை முகாமையாளர் செ. குலபாலசிங்கத்தால் இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது. (6-ப)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்படும் யேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் புனித மடுத்தீனால் குரு மடத்தைச் சேர்ந்த அருள்பணி றெஜீஸ் இராசநாயகம் அடிகளார் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்றகவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கி சிறப்பிப்பதுடன் ஆசியுரையும் வழங்கவுள்ளார்.

இன்றைய பிரதி வழங்கும் நிகழ்வில் , வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்ற அனைத்து கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து நடிப்பதற்கு விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறை கலாமன்றத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு தினமும் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (6)

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

எக்ஸ்போ எயார் நிறுவனம், யாழ். றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எக்ஸ்போ எயார் நிறுவனத்தின் யாழ்.கிளை முகாமையாளர் வசீகரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசா, யாழ். றோட்டறக் கழகத் தலைவர் எல்.தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் பி.ப. 3 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மகாவித்தியாலய ம் எதிர் உடுவில் மகளிர் கல்லூரியும் 4.30 மணிக்கு யாழ். மத்திய றோட்டறக்கழகம் எதிர் யாழ்ப்பாண றோட்டறக்கழகமும் 5 மணிக்கு யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி ஆகியன மோதவுள்ளன. (6-4)

## சிறுவர் உரிமைகள் தொடர்பான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பினால் சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி அலுவலர்களுக்கான கூட்டம் நாளை வியாழக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச் சித் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப் படவுள்ளதால் இத்துறை சார்ந்த அலுவலர்கள் குறித்த தகவல்களுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(6-30)

## பயணிகளை சோதனையிடும் நடவடிக்கைகள்

ஆணையிறவு- ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடிகளில் பயணிகள் சோத னை செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருவதாக குறிப்பிடப்படுகிறது. யாழிலிருந்து வவுனியா நோக்கி வாகனங்களில் செல்லும் பயணிகளும் வவுனியாவில் இருந்து யாழ் வரும் பயணிகளும் இவ்வாறு சோதனையிடப்படுகின்றனர்.

மேலும் ஆணையிறவு இராணுவ சோதனைச் சாவடியில் ஆள் அடையாள அட்டை பரிசோதிக்கப்படுவதுடன் ஓமந்தை இராணுவ சோதனை சாவடியில் ஆள் அடையாள அட்டை, பொதிகள் , உடல் பரிசோதனைகள் என்பனவும் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. (6-10)

## பசுப்பால் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிலுள்ள 2 வயது தொடக்கம் 5 வயது வரையான குழந்தைகளுக்கு கடந்த மாதம் முதல் பசுப்பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்கு இதுவரைக்கும் விண்ணப்பிக்காத பயனாளிகள் அந்தந்த பிரிவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (6)

## புண்ணிய நாச்சியம்மையார் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் . சைவ பரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ பரிபாலன சபையின் தலைவர் சிவநெறிப்புலவர் த. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் காலை 7 மணி முதல் விசேட பூசை, திருமுறை ஓதல், பண்ணிசை என்பன நடைபெறுவதுடன் பின்னர் பண்ணிசை மற்றும் திருக்குறள் மனனப்போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர் களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (6-30)

# அரச உத்தியோகத்தர்களுக்கான விசேட முற்பணக்கொடுப்பனவு

(கொழும்பு)

அரச சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு வருட முற்பகுதியில் வழங்கப்படும் விசேட முற்பணக் கொடுப்பனவை இந்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன் வழங்கி முடிக்குமாறு அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் செயலாளர் டி.திசாநாயக்க சகல திணைக்களத் தலைவர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக முற்பணக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2500 ரூபா முற்பணமாக வழங்கப்பட்டு 10 மாத தவணை அடிப்படையில் சலுகை வட்டி வீதத்துடன் மீள அறவிடப்பட்டுள்ளது.

வருட முற்பகுதியில் அரச சேவையாளர்களுக்கு ஏற்படும் மேலதிக செலவீனங்களை ஈடுசெய்ய உதவும் நோக்கத்துடன் வருடாந்தம் இந்த முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

மேலும் மத்திய மற்றும் மாகாணத் திறைசேரிகள் மூலமாக இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் அரச திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (6)

# இடதுசாரி விடுதலை முன்னணியில் சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போட்டி

(கொழும்பு)

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தலைமையிலான இடதுசாரி முன்னணி இம்முறை பொதுத்தேர்தலில் இடதுசாரி விடுதலை முன்னணி என்ற பெயரில் நாடு முழுவதும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

இம் முன்னணியுடன் இணைந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.க்காளான எம்.கே. சிவாஜிலிங்கம், ஸ்ரீ காந்தா ஆகியோரும் போட்டியிடவுள்ளதாக இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக சமல் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில்,

இடதுசாரி விடுதலை முன்னணி ஊடாக போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவு நடைபெற்று வருவதோடு அதற்கான பட்டியலை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.க்களான சிவாஜிலிங்கம், ஸ்ரீ காந்தா ஆகியோரும் போட்டியிடுகின்றனர். இவர்கள் வடக்கு ,கிழக்கில் போட்டியிடுவார்கள். அத்தோடு தமிழ்,முஸ்லிம் வேட்பாளர்களையும் களமிறக்கவுள்ளோம்.

நாம் என்றும் சிறுபான்மை இனமக்களுக்காகவும் தொழிலாளர் வர்க்கத்தினருக்காகவும் குரல் கொடுத்து வந்துள்ளோம். இந்தக் குரல் பாராளுமன்றத்திலும் ஒலிக்கவேண்டும். மக்கள் உரிமைகளை பெறவேண்டும் என்றார். (6)

# இலங்கையில் எயிட்ஸ் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயைப் பரப்பும் எச்.ஐ.வி வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மட்டும் எச்.ஐ.வி. வைரஸ் தொற்றுக்குள்ளான 130 பேர் பதிவாகியுள்ளதாக தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பரிவின் பணிப்பாளர் டாக்டர் நிமல் எதிரிசிங்க குறிப்பிட்டார்.

1987 ஆம் ஆண்டு முதலாவது எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான முதலாவது நபர் பதிவானதன் பின்னர் இலங்கையில் பதிவாகிய ஆகக் கூடுதலான நோயாளர் எண்ணிக்கை இதுவாகுமென அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை மொத்தம் ஆயிரத்து 222 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானமை பதிவாகியுள்ளது.

எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான 300 பேர் இதுவரை இலங்கையில் உயிர் இழந்துள்ளனர்.

சுற்றுலாத்துறையின் வளர்ச்சியையடுத்து எயிட்ஸ் நோய்த் தொற்று பரவக் கூடிய அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

மேலும் எயிட்ஸ் நோய் தொற்றுக்கு சிகிச்சை அளிக்கும் விரிவான வேலைத்திட்டம் ஒன்று நாட்டில் நடைமுறையில் உள்ளதாகவும் தெரியவருகிறது. (6)


# பாடசாலைகள் இன்றி மரநிழலில் கல்விகற்கும் இடம்பெயர்ந்த மாணவர்கள்

இடம்பெயர்ந்த தமிழ் சிறுவர்கள் பலர் பாடசாலைகள் இன்றி மரநிழலில் கல்விகற்று வருவதாக வவுனியா தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது;

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் விடுதலை செய்யப்பட்ட போது விடுதலை செய்யப்பட்ட சிறுவர்களில் பெருமளவானோர் பாடசாலைகளில் இடமின்றி கல்விகற்க முடியாது இருக்கின்றனர்.

சிலர் பாடசாலைகளில் இணைத் துக் கொள்ளப்பட்ட போதும் 2 ஆயி ரத்து 500 இற்கும் அதிகமான சிறுவர்களில் கீழ் தொடர்ந்து வருகின்றனர்.



வவுனியாவில் உள்ள காமினி மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்கள் வகுப் பறைகள் இன்றி மரநிழல்களின் கீழ் கல்வி கற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (6)


முதன் முறையாக யாழ் மாநகரினிலே

BRITISH COLLEGE OF HIGHER STUDIES & Computer Express

ஆகிய இரு நிறுவனங்கள் எம் மக்கள் அனைவரினதும் நன்மை கருதி அவர்களின் ஆங்கில , கணனி அறிவினை மேம்படுத்துவதற்காக

100 % புலமைப்பரிசில்களுக்கான மாபெரும் போட்டிப்பரீட்சை

இப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 10 மாணவர்களுக்கு P4 கணனிகள் பரிசாக வழங்கப்படும்.



**இப்போட்டிப்பரீட்சைக்கு தோற்றத்தகுதியுடையோர்**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள், அரச, தனியார்துறையில் வேலை செய்பவர்கள், எதிர்காலத்தில் சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் படிப்பினைத் தொடரவுள்ளோர், ஏனையோர்கள்.

**விண்ணப்ப முடிவுத்திகதி 24.02.2010**

போட்டிப்பரீட்சையில் ஆங்கிலம், கணனி அறிவினை பரிசோதிக்கும் இரண்டு வினாத்தாள்கள் வழங்கப் படும். இவை ஒவ்வொன்றும் ஒரு மணித்தியால நேர எல்லையைக் கொண்டது ஆங்கில வினாத்தாளில் மாணவர்கள் பெறும் புள்ளிகளிற்கேற்ற வகையில் புலமைப்பரிசினை பெற்றுக்கொண்டு அவர்கள் lower level, Intermediate level, Upper level எனப்பிரிக்கப்பட்டு, அடிப்படையிலிருந்து ஆங்கிலப் பயிற்சியினை British Council நிறுவனத்தின் ஆங்கில கற்கை நெறிகளிற்கு இணையாக நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய Audio, visual முறையில் துறைசார் அனுபவம் மிக்க ஆசிரியர்குழாமினால் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வில் வளமான எதிர்காலத்தினை ஆளுமை விருத்தியுடன் அடைவதற்கு 100% உறுதிப்பாடு வழங்கப்படும்.

போட்டிப்பரீட்சையில் கணனிப்பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெறும் புள்ளிகளிக்கேற்ற வகையில் அனைத்து Diploma, Advanced Diploma கற்கை நெறிகளில் 100% புலமைப் பரிசினை பெற்றுக் கொள்வதோடு நிகழ்கால தொழிற்துறையில் கணனித் தேவைப் பாட்டிற்கமைவாக அவர்கள் அதிநவீன கணனி ஆய்வுகூடத்தில் நடைமுறையிலுள்ள வினைத்திறன்மிக்க மென் பொருளினூடாக நீண்டகால அனுபவம் மிக்க புலமைசார் விரிவுரையாளர்களால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பரீட்சை நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| யாழ் மத்திய கல்லூரி | 27.2.2010 | 10.00 - 12.00 |
| இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | 28.2.2010 | 10.00 - 12.00 |
| சாவகச்சேரி இந்துக்கல்லூரி | 28.2.2010 | 10.00 - 12.00 |

**பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை** எமது British College Of Higher Studies, Computer Express நிறுவனங்களிலும், பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பரீட்சார்த்திகள் கவனத்திற்கு** பரீட்சார்த்திகள்/பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் கீழே காணப்படும் விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்து அதன் பிரதியை நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ BCHS அல்லது Computer Expressக்கு அனுப்பிவைப்பதுடன் அதன் மூலப்பிரதியுடன் பரீட்சை நிலையத்திற்கு நேரடியாக சமூகமளிப்பதனூடாக பரீட்சைக்கு தோற்ற முடியும்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு எவ்வித முன்கட்டணமும் அறவிடப்படமாட்டாது

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
Second Floor,
No 15 Sirampiyady Lane,
Off Stanley Road. Jaffna.
Tel: 021 2224550 / 0714299935
0777585913 Email: info@bchs.lk
(ஆரியகுளம்சந்திக்கு அருகில் கொசி Hotel மேல்)

**Computer Express**
No 167, Kasthuriyar Road,
Jaffna.
Tel: 021 2228250 / 0777222422
(உதயன் பணிமனை
அருகாமை நாவலர்சந்தி)

**Application Form**

Full Name :.................................... Phone No.:....................
Address :.................................... Mail ID :....................
Center :.................................... Date....................
Sex :.................................... N.I.C.No.:.................... Signature ....................

### தென்னிலங்கையிலிருந்து

# தினமும் 5 ஆயிரம் பேர் யாழ்ப்பாணம் வருகை

தற்சமயம் தென்னிலங்கையிலிருந்து தினமும் ஐயாயிரம் பேர் வரை யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக யாழில் தங்குமிடப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழில் தங்குமிட வசதியை உறுதிப்படுத்திய பின்னரே பயணத்தை மேற்கொள்ளும் படி அரசாங்கம் அறிவுறுத்தல் வழங்கியும் கூட அநேகர் அதனை உதாசீனம் செய்து யாழிற்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 பாதை தங்குதடையின்றி போக்குவரத்திற்குத் திறந்து விடப்பட்டதன் பின்னர் இதுவரை இரண்டு இலட்சம் பேர் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது. (6)

# சிவில் பாதுகாப்பு படையின் புதிய பணிப்பாளராக றியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் நியமனம்

(கொழும்பு)



சிவில் பாதுகாப்புப் படையின் புதிய பணிப்பாளராக றியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பணிப்பாளரான றியர் அட்மிரல் சரத் வீரசேகர ஓய்வுபெற்றதையடுத்து அந்தப் பதவியில் நிலவிய வெற்றிடத்தைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் றியர் அட்மிரல் ஆனந்த பீரிஸ் தனது கடமையினை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மற்றும் பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயம் போன்றவற்றில் ஆரம்பக் கல்வியைக் கற்ற றியர் அட்மிரல் ஆனற்த பீரிஸ் 1974ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி கெடெட் அதிகாரியாக கடற்படையில் இணைந்து கொண்டார். சுப்பர் டோரா மற்றும் அதிவேக டோராப் படகுகளுக்கான கட்டளையிடும் அதிகாரியாக தனது கடற்படையைச் சேவையில் கால்பதித்த அவர் பின்னர் சீனத் தயாரிப்பான அதிவேக தாக்குதல் படகுகளுக்கான ஆணையிடும் அதிகாரியாகவும் கடமையாற்றினார். (6)

# உலகத் தமிழ் சிற்றிதழ்கள் சங்க மாநாட்டில் விருது பெறும் சஞ்சிகைகள்

(கொழும்பு)

உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத்தின் 5ஆவது மாநாட்டில் விருது பெறும் இலங்கைத் தமிழ்ச் சிற்றிதழ்கள் பற்றிய விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி கொழும்பிலிருந்து வெளிவரும் *ஞானம்* சஞ்சிகை *தமிழ்த் தாய் அறக்கட்டளை* விருதையும் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் *செங்கதிர் சஞ்சிகை அய்யன் திருவள்ளுவர் இலக்கியப்பேரவை* விருதையும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் *ஜீவநதி சஞ்சிகை இனிய மணா இலக்கிய* விருதையும் பெற்றுக் கொள்ளவுள்ளன.

இதேவேளை விருது வழங்கும் வைபவம் தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் இம்மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் சிற்றிலக்கிய மாநாட்டில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வாழை

Botanical Name-Musa Sapientum
Family - Scitaminaceae
Engl - Banana
Sinh - Kesal/Kehel

சமவெளி மற்றும் மலைப் பிரதேசங்களில் பயிராகின்ற பழப்பயிராகும். அத்துடன் தோட்டக்காலிலும் நஞ்சையிலும் சாகுபடி செய்யலாம். இது ஓர் நடுத்தர மரமாகும். தண்டு, பட்டை வளவளப்பானது. இலைகள் நீளமானது. மேற்பகுதி பளபளப்பானது. வாழை ஒரு விதையிலைத் தாவரமாகும். இதன் இலை தனியிலை மற்றும் இலை அடுக்கு வகையைச் சார்ந்தது. இலைகள் சுழல் வட்டத்தில் தண்டில் உண்டாகின்றன. இளந்தளிர்கள் சுருள் மடிப்பு அமைப்பை உடையவை. மஞ்சரி செடியில் நுனியில் உண்டாகிறது. மஞ்சரிக்காம்பைச் சுற்றி பூக்கள் பல அடுக்குகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடுக்கும் ஒரு மடலால் மூடப்பட்டு இருக்கும்.

### இனவிருத்தியும் பரம்பலும்:

வாழையில் 80இற்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு. அவற்றுள் சில இரகங்களே யாழ்ப்பாணத்தில் பயிரிடப்படுகின்றது. அவற்றுள் மருத்துவ முக்கியத்துவமுடைய இனங்களாக மருத்துவ வாழை, இதர வாழை, நேத்திரன் வாழை, மொந்தன், கற்பூரவள்ளி இனங்கள் முக்கியமானவையாகும்.

3 மாத வயதுடைய ஈட்டி இலைகளையுடைய கன்றுகள் நடுகைக்கு சிறந்தது. கன்று நட்ட 12 - 15 மாதங்களில் காய்களை அறுவடை செய்யலாம்.



### மருத்துவக் குணங்கள்

- வெந்நீர், கொதிக்கும் எண்ணெய் அல்லது தீப்பட்டு உடல் பகுதி வெந்தது போன்ற நிலையில் வாழை இலைக்குருத்தை தளிர் இலையை அவ்விடங்களில் வைத்துக்கட்ட விரைவில் குணம்.
- காய்ந்த இலையை தேங்காய் எண்ணெயில் குழப்பி தீப்புண், சீழ் வழுகும் காயங்களுக்கு தடவப் பயன்படுத்தலாம்.
- கொப்பளங்களின் மீது பச்சை வாழை இலையை வைத்துக்கட்ட குளிர்ச்சி உண்டாகி விரைவில் ஆறும்.
- வாழையில் உள்தண்டை சிறு சிறு துண்டுகளாக்கி நார்போக்கி சமைத்துண்ண சிறு நீர்த்தாரைகளில் ஏற்படும் கல்லடைப்பைக் கரைக்கும்.
- பாம்புக் கடிக்கு வாழைப் பட்டை நீர் அல்லது வாழைத் தண்டின் நீர் 60-100 மில்லி வரை அருந்தலாம்.
- வாழைத் தண்டை உலர்த்தி பொடித்து அத்துடன் தேன் கலந்து உட்கொள்ள காமாலை நோய் தீரும்.
- வாழைத்தண்டின் சாற்றை தேள், பூரான் கடித்தால் கடிவாயில் பூச வலி தணியும்.
- வாழைத்தண்டை சுட்டு அதன் சாம்பலை தேங்காய் எண்ணெயில் குழப்பி தடவிவர தீப்புண்கள், கீழ்க்காட்டிகள் மற்றும் காயங்கள் விரைவில் குணமாகும்.
- முதிர்ச்சியடையும் காய்கள் உண்டான பின்பு வாழைப்பூக்களைக் குறுக்காக சிறுசிறு துண்டுகளாக்கி அரிந்து நெய்யில் பொரித்து உட்கொள்ள அஜீரணம் தீரும். குளிர்ச்சியை கொடுக்கும்.
- பெண்களுக்கு ஏற்படும் பெரும்பாட்டிற்கு வாழைப்பூச் சாற்றுடன் தயிர்கலந்து அருந்தலாம்.
- பூச்சாற்றை பனங்கற்கண்டுடன் சேர்த்துக் கொடுக்க சீகபேரி தீரும்.
- வாழைப்பூவை கருணைக்கிழங்கு, பாசிப் பருப்பு இவற்றுடன் சேர்த்து கூட்டு அல்லது பொரியல் செய்து சாப்பிட மூலநோய் தீரும்.
- வாழைப்பூவுடன் பருப்பு சேர்த்துண்ண ஆசனக் கடுப்பு, கைகால் எரிச்சல், இருமல் தணியும்.
- மாதவிடாய் காலத்தில் ஏற்படும் இரத்த போக்கையும் வலியையும் குறைக்க வேக வைத்த வாழைப்பூவுடன் தயிர் சேர்த்துண்ண வேண்டும்.
- உடல் அளவுக்கு மேல் பருமனுள்ளவர்கள் வாழைப்பழத்தில் பசுப்பால் சேர்த்து பிசைந்து வாழைப்பூவின் சாற்றையும் கலந்து தினம் ஓரிரு முறை அருந்த உடற் பருமன் குறையும்.
- வாழைக்காயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி மிளகுப் பொடி, உப்பு ஆகியவற்றின் கலவையில் பிசைஞ்தெடுத்து பசுநெய்யில் வறுத்துண்ண சீகபேதி குணமாகும். இரத்த விருத்தியுண்டாகும்.
- வாழைக்காயை வேகவைத்து அத்துடன் பாகற்காய்ச்சாறு சேர்த்து சாப்பிட்டால் நீரிழிவு நோய் குணமாகும்.
- வாழைக்காயின் தோலை தண்ணீரில் நன்கு காய்ச்சி குடிநீர் தயாரித்து அளவுடன் சீனி கலந்து குளிரவைத்து அருந்தினால் சிறுநீர் நன்கு வெளிப்படும்.
- பழுத்தபழங்கள் வெகுவிரைவில் சீரணமாகும். மலர்ச்சிக்கலை நீக்கும். ஒன்றாக பழுத்த பழங்களை குழைய கரைத்து மோருடன் சேர்த்துச் சாப்பிட உள்ளங்கால், கை, கண் எரிச்சல் தீரும்.
- பாலில் நன்கு பழுத்த பழத்தை போட்டு வேகவைத்து குழைத்து கலக்கி சாப்பிட மூல நோய் தீரும்.
- கசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைப்பழத்துடன் தயிர், தேன் சேர்த்து இளநீர் கலந்து குழைத்து சாப்பிட்டால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.
- வாழைப்பழத்துடன் சிறிது தேன்கலந்துண்ண அம்மை, நெருப்புக்காய்சலினால் ஏற்படும் உபத்திரங்கள் தணியும்.
- வாழைக்கிழங்கை இடித்து சாறு எடுக்க வேண்டும். அச்சாற்றை வடிகட்டி எடுக்க வேண்டும். இதில் வேளைக்கு 50 முதல் 100 மில்லி வரை அருந்த வேண்டும். இதனால் சிறு நீர் தடையின்றி பிரிந்து அடிவயிறு வீக்கம் தணியும். வயிற்றுப் புண் ஆறும். உடல் குளிர்ச்சிடைந்து வலிமைபெறும். வாழைக்கிழங்கை இடித்துச் சாற்றை எடுத்துவிட்டு சக்கையை அடிப்பட்ட வீக்கங்கள் மீது வைத்துக்கட்டினால் வீக்கம் வடியும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

### 100 கிராமிலுள்ள சத்துக்கள்

| சத்துக்கள் | கிழங்கு | தண்டு | பூ | காய் | பழம் |
|---|---|---|---|---|---|
| புரதம் (கி) | 0.4 | 0.5 | 1.7 | 1.4 | 1.2 |
| கொழும்பு (கி) | 0.2 | 1.0 | 0.7 | 0.2 | 0.3 |
| நார்ப்பொருள் (கி) | 1.1 | 0.8 | 1.3 | 0.7 | 0.4 |
| காபோவைதரேற்று (கி) | 11.8 | 9.7 | 5.1 | 14.0 | 27.2 |
| கல்சியம் (மி.கி.) | 25 | 10 | 32 | 10 | 17 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 10 | 10 | 42 | 29 | 36 |
| இரும்பு (மி.கி) | 1.1 | 1.1 | 1.6 | 0.6 | 0.9 |
| விற்றமின் 'C' (மி.கி) | 1 | 7 | 16 | 24 | 7 |
| கரோட்டீன் (மைக்ரோகிராம்) | 16 | 0 | 27 | 30 | 78 |
| மகனீசியம் (மிலி) | -- | -- | 54 | 33 | 34 |
| பொட்டாசியம் (மி.கி) | -- | -- | 185 | 192 | 88 |
| ஒக்ஸாலிக்கமிலம் (மி.கி) | -- | -- | 420 | 480 | -- |
| போலிக்கமிலம் (மைக்ரோகிராம்) | -- | -- | -- | 16.4 | -- |

# பொன்சேகா குற்றமற்றவர் என்பதை எந்த நீதிமன்றத்திலும் உறுதிப்படுத்த தயார்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா ஒரு அப்பாவி என்பதை என்னால் எந்த நீதிமன்றத்திலும் உறுதிப்படுத்த முடியும் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; பொன் சேகாவைக் கைது செய்தது போலவே அரசு ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களையும் அடக்கிவைக்க முற்படுகின்றது என்பது தற்போது தெளிவாகிறது.

எனக்கும் பொன்சேகாவுக்கும் தொடர்புகள் ஆரம்பத்தில் இருந்ததாக ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா தெரிவித்திருந்தார். ஆனால் பொன்சேகா படையினரின் பிரதம அதிகாரியாக இருந்தபோது என்னுடன் எது தொடர்பிலும் கலந்துரையாடவில்லை. பொன்சேகா மீது அமெரிக்கா மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பில் நாம் அவருடன் கலந்துரையாடியிருந்தோம். ஆனால் அதனை அரசு தவறாகப் புரிந்து கொண்டு எம்மீது தவறான குற்றங்களைச் சுமத்தி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# டெங்கு நோய் தடுப்புப் பணிகளில் சுகாதாரத் தொண்டர்களை ஈடுபடுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களில் டெங்கு நோய் பரவுவது தற்போது தீவிரமடைந்திருப்பதாக சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்குநோய் பரவுவதைத் தடுப்பதற்காக இருபது நாட்களுக்குள் நாடளாவிய ரீதியில் 16 இலட்சத்து 25 ஆயிரம் வீடுகளைப் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போஷாக்குத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் அமைச்சின் கீழுள்ள டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவின் ஊடாக அடுத்த வாரம் முதல் இருபது நாட்களுக்கு முன்னெடுக்கப்படவிருக்கின்றது.

நாட்டில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையும் 5 ஆயிரத்து 657ஆக அதிகரித்துள்ளதுடன் அவர்களில் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்தது.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக்கக் கூடிய இடங்கள் தொடர்பாக டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேற்கொள்ளவிருக்கும் பரிசோதனை குறித்து அப்பிரிவின் அதிகாரியொருவர் கூறுகையில்; நாட்டில் உள்ள 65 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பெருகும் இடங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

அதன் காரணத்தினால் இப்பிரிவுகளிலுள்ள வீடுகளையும் சுற்றாடலையும் சுகாதாரத் தொண்டர்களை ஈடுபடுத்தி சோதிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுக்கு ஐம்பது தொண்டர்கள் படி 65 பிரிவுகளுக்குமென 3 ஆயிரத்து 250 தொண்டர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இத்தொண்டர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 25 வீடுகளைப் பரிசோதிக்க வேண்டும். இதற்குரிய அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும் இச்சோதனையின்போது டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய சுற்றாடலைக் கொண்டிருக்கும் வீடுகள் இனம் காணப்படுமாயின் அவ்வீடுகளின் உரிமையாளர்களுக்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்படும்.

தவறும் பட்சத்தில் பொது சுகாதார பரிசோதகர்கள் ஊடாக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (6)


IMMEDIATE VACANCIES IN
KURDISTAN
குர்திஸ்தான் நாட்டின்
தலைநகர் ERBIL சர்வதேச
விமான நிலையத்தில்
(ERBIL INTERNATIONAL AIRPORT)
உடனடி வேலை வாய்ப்பு
14 நாட்களுள் வீசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.
வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை
23.02.2010 (செவ்வாய்கிழமை).
CLEANERS - AIR PORT - REQ No.100
100 விமானநிலைய கிளினேர்ஸ்.
மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.
MONTHLY SALARY - US$ 250/-
(S.L.Rs.28,750/=)+ O.T Available.
❊ தங்குமிட வசதி இலவசம் ❊ உணவு இலவசம் ❊ மருத்துவ வசதி இலவசம்.
❊ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).
வயது: 22 - 32 வரை.
மேலதிகமாக ஆட்கள் தேவைப்படுவதனால் தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி எண்ணுடன் உடனடியாக தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யவும்.
மொபைல்: 077-8263228 (யாழ்ப்பாணம்).
Terms & Conditions
Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.
உங்களது பாஸ்போட் (எல்லா நாட்டுக்குமான-ALL COUNTRIES), 12 பாஸ்போட் Size கலர் படங்களுடனும் (White Background) 23.02.2010 செவ்வாய்கிழமை கொழும்பில் 375, டாம் வீதியில் உள்ள எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும். ஆங்கில அறிவு அதிகம் வேலையில்லை. இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.
கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.
☆ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.☆
இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு
TRANSSTAR-
INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,
375, Second Floor, Dam Street, Colombo 12.
Tel: 011 - 471 8936 Mobile: 077-826 3228
S.L.Bureau Labour Licence : 1311.
S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.
(Near Hulftsdorp Courts - Colombo)
(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)
(சி-4456)


# பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள்

இலங்கை கலைக்கழகத்தின் சித்திரம் மற்றும் சிற்பக்கலை துணைக்குழுவின் ஒத்துழைப்புடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2010இற்கான அரச சிறுவர் சித்திரவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடமிருந்து சித்திரப்படைப்புக்கள் கோரப்படுகின்றன.

இதில் 5 வயது முதல் 6 வயது வரை பாலர் பிரிவும், 7 முதல் 9 வரை சிறுவர் பிரிவும், 10 முதல் 12 வரை கனிஷ்ட பிரிவும், 13 முதல் 15 வரை சிரேஷ்ட பிரிவும், 16 முதல் 18 வரை அதி சிரேஷ்ட பிரிவுமாக போட்டி பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் போட்டி விதிமுறைகளாகப் போட்டியாளர்கள் தமக்கு விரும்பிய எந்தவொரு தலைப்பிலும் வரையலாம் எனவும் விரும்பிய சாதனங்களைப் பயன்படுத்தலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன் சித்திரம் வரையப்படும் தாள் 18X14 அளவை உடையதாக இருப்பதுடன் ஒருவர் ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்கலாம் எனவும் இப்போட்டிக்கு அனுப்பப்படும் ஆக்கம் வேறு எப்போட்டிகளுக்கும் அனுப்பப்படலாகாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் போட்டியாளர் தாம் பிறந்த மாவட்டத்தில் மட்டுமே ஆக்கத்தை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சித்திரப் படைப்பின் பின்புறத்தில் பெயர், பிறந்த திகதி, வயது, முகவரி, போட்டிப் பிரிவு, மாவட்டம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பதாரி ஒப்பமிடுவதோடு பாடசாலை அதிபர் மாணவரின் சொந்த ஆக்கமென உறுதிப்படுத்தி அலுவலக முத்திரை இடுதல் வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

இதில் முதற்கட்டப் போட்டியிலிருந்து மாவட்ட ரீதியாக 150 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அந்த மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில் சித்திரம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி பட்டறைக்கு அழைக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் சித்திரப் பயிற்சிப் பட்டறையில் தெரிவாகும் சித்திரங்கள் அரச சிறுவர் சித்திர விழாவில் காட்சிக்கும் வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டாம் சுற்றில் வெற்றிபெற்ற படைப்பாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் உலக சிறுவர் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி கொழும்பு 7இல் அமைந்துள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மாவட்ட பயிற்சிப் பட்டறைக்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட போட்டியாளர்கள் தங்களது ஆக்கங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்கலாம் எனவும் அல்லது செயலாளர் தேசிய சித்திரம் மற்றும் சிற்பத் துணைக்குழு, தேசிய கலைக் கூடம் ஆனந்த குமாரசுவாமி மாவத்தை கொழும்பு 7 என்ற முகவரிக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 09

## கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக்குறிப்புகள்

பேராசிரியர்
சி.பத்மநாதன்

**திருகோணமலை வன்னிபம்**

திருகோணமலை கட்டுக்குளம் ஆகிய பிரிவுகளின் அதிபர்களாக வன்னியங்கள் நியமிக்கப் பெற்றமை பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் கூறுகின்றது. அதன் உரைப் பகுதியின் பிரிவுகள் பல முழுமையும் வன்னிபங்களைப் பற்றியனவாகவே அமைந்துள்ளன. திருகோணமலை வன்னிமையின் உற்பத்திக்குக் குளக்கோட்டனே காரணனாய் விளங்கினான் என்பதை மேல் வரும் பாடல் உணர்த்துகின்றது:

*தானம்வரிப்பத்தென்னுமரன்றொழும்பர்க்குள்*
*இகலார் தர்க்கம் வந்தால்*
*மானபங்க மடையாம னடுத்தீர்ப்ப*
*தாரென்வே மதுரையூர் போய்த்*
*தான மதிக்குலராமன் தனியுண்ணாப்*
*பூபாலன் றனைக் கொணர்ந்து*
*தேனமர்பூந்தொடை மார்பன்திருக்கோண*
*நகரரசு செய்ய வைத்தான்*

இப்பாடல் திருகோணமலை வன்னிமையின் உற்பத்தியினை விளக்குவதாய் அமைகின்றது. திருகோணமலையில் ஆட்சி புரிவதும் நீதிபரிபாலனஞ் செய்வதும் வன்னிபத்தின் பிரதான கடமைகள் என்பது இப்பாடலின் மூலம் தெளிவாகின்றது. தனியுண்ணாப் பூபால வன்னிபங்கள் மதுரை நகரிலிருந்து வந்தோரின் மரபினர் என்ற ஐதிகத்தையும் வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகின்றது. தனியுண்ணாப் பூபாலன் மரபினரின் முன்னோர்கள் குளக்கோட்டனின் காலத்திலே வன்னிபம் என்னும் பதவியைப் பெற்றிருத்தல் கூடும். ஆயினும் குளக்கோட்டு மன்னனின் காலத்தில் வன்னிமை உருவாகியது என்பதும் ஆலய சேவைகளை நடத்துகின்ற சமூகங்களின் மத்தியிலே அமைதியினை நிலைநாட்டுவதற்கென்று வன்னியர் நியமிக்கப் பெற்றனர் என்பதுவும் ஆராய்ந்து தெளிவுறுத்தற்குரியனவாகும். திருகோணமலை வன்னிபத்தின் பொறுப்புக்களையும் கடமைகளையும் ஏதுவாகக் கொண்டு வன்னிமையின் உற்பத்தியினைக் கவிராசவரோதயர் விளக்கியுள்ளார்.

நீதிபரிபாலனத்துறையில் வன்னியத்திற்குரிய அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் மேல்வரும் பாடல் குறிப்பதாயுள்ளது:

*சுத்தமிகு வன்னிமையே குற்றஞ்செய்தாற்*
*துலங்கு விலங்கடியுயிருக்குயிரே வாங்கு*
*நிர்த்தமிடு மடவியர்கள் குற்றஞ் செய்தா*
*னிறை புனலி னிறுத்திவைத்துத் தேங்காய்*
*வாங்கு*
*மற்றை மதிநுதல் மடவார் குற்றஞ் செய்தால்*
*மண்கடக மேற்றி யடிவாங்கு நோக்கி*
*இத்தகைய விராசாங்கஞ் செய் நீ யென்றே*
*இரத்தின மணியாசனத்தி லிருத்தி வைத்தான்.*

கொலை புரிவோருக்கு மரண தண்டனை வழங்கும் அதிகாரம் வன்னி பத்துக்கு உரியதாயிருந்தது. பிற குற்றங்களைப் புரிவோரை அவரவர் செய்த பழிகளுக்கேற்ப விலங்கிட்டுக் கசையடி கொடுப்பது வழமை கோயிலிலுள்ள நாட் டியப் பெண்கள் குற்றம் புரியுமிடத்து அவர் களை நிறைந்த நீரில் நிறுத்தி வைத்துத் தண்டிக்க வேண்டும். ஏனைய பெண்கள் குற்றம் புரியும் வேளைகளில் மண் கடகத்தைச் சுமக்குமாறு செய்தும் அடித்தும் தண்டிக்க வேண்டும்.

கோணேசர் கோயிலில் ஆராதனைகளையும் ஆலய சேவைகளையும் தடையின்றியும் சிறப்பாகவும் செய்விப்பது திருகோணமலை வன்னிபத்திற்குச் சிறப்பாகவுள்ள பொறுப்பாகும். ***மையனைய கண்டர் திருக்கோணநாதர் மகாபூசை திருப்பணியும் வழங்கச் செய்யே*** என்பது வன்னியத்தை நோக்கிச் சொல்லப்பட்ட நியதி என்று கவிராசவரோதயன் செப்புகின்றமையும் கவனித்தற்குரியது. கோயிற் காரியங்கள் தொடர்பாகத் தானம் வரிப்பத்தார் முதன்மை, நாட்டவர் முதலியோரை அழைத்து அவர்கள் முன்னிலையிலே சில சமயங்களில் வன்னிபம் விசாரணைகள் நடத்தியமை பற்றிக் கோணேசர் கல்வெட்டின் உரைநடைப் பகுதியிலே சில குறிப்புகள் காணப்படுகின்றன.

திருகோணமலை வன்னிபம் பற்றிக் கோணேசர் கல்வெட்டிலுள்ள சில செய்திகள் கங்குவேலிக் கல்வெட்டின் மூலம் உறுதியாகின்றன. பதினான்காம் நூற்றாண்டிற்குரிய வரிவடிவங்களில் அமைந்த அக்கல்வெட்டின் வாசகம் மேல்வருமாறுள்ளது:

மலை(யில்) வன்னியனாரும்
ஏழுரில் அடப்பர்களுங் கூடி தம்பிரானார் கோணை
நாதனுக்கு கங்குவேலியில் வெ(ளி)
யும் புல்நடப்(பு)ம் ஆக விட்டோம். யிதுக்கு
யாதொருவன் ஆகிலும் ஆகுதம்
நினைத்தவர்கள் கெங்கைக் கரையிலே
காராம்பசுவைக் கொன்ற பாவம்
கொள்ளக் கடவர் ஆகவும் யிப்படிக்கு
யிரண்டு முதலிமை தானம் வரிப்பற்றும்

இச்சாசனம் மூன்று வசனங்களைக் கொண்டுள்ளது. முதலாவது வசனம் கங்குவேலியிலுள்ள வெளியொன்றினையும் புல்வரியினையும் மலை வன்னியனாரும் ஏழூர்களின் அடப்பர்களும் கோணைநாதர் கோயிலுக்குத் தானம் செய்தமையினைக் கூறுகின்றது. அரசன் எவனைப் பற்றியும் சாசனங் குறிப்பிடாதமையால் மலை வன்னியனார் இச்சாசனம் எழுதப் பெற்ற காலத்திலே சுதந்திரமாகவே ஆட்சி புரிந்தான் என்பதை ஊகித்துணரமுடிகின்றது. வேறெந்த வன்னிபமும் மலையில் வன்னியனார் திருகோணமலை வன்னியமாதல் வேண்டும். மேலும் இச்சாசனம் எழுதப்பட்ட காலத்திற் கொட்டியாரம்பத்திலுள்ள கங்குவேலி என்னுங் கிராமமும் திருகோணமலை வன்னிபத்தின் அதிகாரத்தின் கீழிருந்தது என்பதும் அறியப்படுகின்றது. கரையோரக் கிராமங்களின் தலைவர்களை அடப்பர் என்று வர்ணிப்பது வழமை. இச்சாசனங் குறிப்பிடும் ஏழூர்களும் கொட்டியாரம்பத்தைச் சேர்ந்த கிராமங்களாதல் வேண்டும்.

சாசனத்தின் இறுதி வசனம் முதலிமை, தானம் வரிப்பத்து ஆகியோரைக் குறிப்பிடுகின்றது. இலங்கையிலுள்ள சாசனங்களில் இது ஒன்று மட்டுமே இம் மூன்று குழுவினரையுங் குறிப்பிடுகின்றது. இம் மூன்று வகையோரும் கோணேசர் கோயிலோடு தொடர்புடையவர்கள் என்று நூல்கள் கூறுவதாலும் வேறெந்தவொரு கோயிலுடனும் இம்மூன்று வகையினரும் சம்பந்தப்பட்டிருந்தமைக்கு எதுவிதமான ஆதாரங்களுங் கிடைக்காதமையாலும் கங்குவேலிக் கல்வெட்டுக் குறிப்பிடும் முதலிமை, தானம் ,வரிப்பத்து ஆகியோர் திருக்கோணணேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகின்றது. கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட தானத்தைக் கோயிலின் சார்பிலே பொறுப்பேற்றுக் கொள்வோர் என்ற வகையில் இவர்களைச் சாசனங் குறிப்பிடுகின்றது. யிரண்டு முதலிமை என்ற சாசனத்தொடரானது இருபாகை முதன்மை, ஒரு பாகை முதன்மை என்று கோணேசர் கல்வெட்டு வர்ணிக்கும் பிராமணக் குரவரிருவரையுமே குறிப்பிடுவதாய் அமைகின்றது. தானத்தார் வரிப்பத்தார் என்போர் பற்றி நூல்கள் கூறுவனவும் கங்குவேலிச் சாசனத்தால் ஒருவாறு உறுதியாகின்றன.

திருகோணமலை வன்னிபங்கள் பூபாலக்கட்டு என்னுமிடத்திலுள்ள மாளிகையிலே வாழ்ந்தனர் என்பதைக் கோணேசர் கல்வெட்டால் அறிய முடிகின்றது. தனியுண்ணாப் பூபால வன்னிபங்கள் 32 பேரின் பட்டியலொன்றும் இந்நூலிலுள்ளது.

வன்னிபம் வரவு காரைநகரால் வந்த வன்னிபம் சோழநாட்டு வன்னிபம், மருங்கூர் வன்னிபம் என்று உரைநடைப் பிரிவில் வரும் நான்கு தலைப்புக்களின் கீழும் உள்ளவை பெயர்ப்பட்டியல்களே. திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள நான்கு வன்னிமைப் பிரிவுகளுக்குத் தலைவர்களாக விளங்கிய வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்த வன்னிபங்களின் பெயர்ப் பட்டியல்களாகவே இவை கொள்ளத்தக்கவை. மருங்கூர் வன்னிபம், சோழநாட்டு வன்னிபம், காரைநகரால் வந்த வன்னிபம் என்ற தலைப்புகளின் கீழே முறையே 37, 31, 42 என்ற எண்ணிக்கையிலுள்ளவர்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன. திருகோணமலை வன்னிப்ங்களுக்குத் தனியுண்ணாப் பூபாலன் என்பது குலப் பெயராக விளங்கியது போல சிங்கன், குமாரசிங்கன் என்பன முறையே சோழநாட்டு வன்னிபம், மருங்கூர் வன்னிபம் ஆகிய வம்சங்களுக்குரியவர்களின் குலப்பெயர்களாக விளங்கின. இந்நான்கு வம்சங்களைச் சேர்ந்தவர்களும் ஒரே வன்னிமைப் பிரிவில் வரிசைக் கிரமமாக ஆட்சி புரிந்தவர்கள் என்று கொள்ளும் விதமாகக் கூறியுள்ளதன் மூலம் வன்னியர் வம்சங்களைப் பொறுத்தவரையிற் கோணேசர் கல்வெட்டு ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கட்டுக்குளம்பற்று வன்னிபம்**

கட்டுக்குளம் பற்று ஒரு வன்னிப் பிரிவாக அமைந்திருந்தது என்பது உரைநடைப் பகுதியிலுள்ள பிரிவொன்றினாலே அறியப்படுகின்றது. குளக்கோட்டன் திருநெல்வேலியிலுள்ள காராளனொரு வனை அழைத்து வந்து அவனுக்கு இலங்காபுரியிற் கட்டுக்குளப் பற்றடங்கலு மூராட்சியுங் கொடுத்து நிலாவெளி நிந்தவூராகக் கொடுத்து.... வன்னிபத்துக்குச் சரியான வரிசை மானியமும் கொடுத்து... இனி எந்தக் காலமும் இச் சிவாலயத்தில் நடக்கப் பட்ட காரியங்கள் உன் வம்சத்தவர்கள் எழுதி வரவேண்டியது எனவும் சற்புத்திரனாகிப் பொறுதிவிசாரமுள்ள மருமக்களிடமிருந்து வரவேண்டியது என்றும் திட்டம் பண்ணினான் என்று சொல்லப்படுகின்றது.

(தொடரும்)

# பொன்சேகா கைதுசெய்யப்பட்டமை பழிவாங்கும் நடவடிக்கையே

## சர்வமத பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை மற்றும் அதனை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் எத்தகைய காரணத்தை கூறினாலும் இந்த செயற்பாடானது எதிராளிகளை பழிவாங்குவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையாகவே அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ள சர்வமத பேரவை, இராணுவ பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த திடீர் கைதானது தமக்கு அதிருப்தியை தருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இத்தேபான தம்மாலங்கா தேரர், பெல்லன்வில விமலரத்தன தேரர், கொழும்பு பேராயர் அதிவண மல்கம் ரஞ்சித் ஆண்டகை, முன்னாள் பேராயர் அதிவண ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை, இலங்கை திருச்சபையின் பேராயர் துலிப் டி சிக்கேரா மற்றும் பானகல உபதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் கையெழுத்திட்டு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முன்னாள் இராணுவ தளபதியும் கூட்டுப் படைகளின் முன்னாள் தலைமை யதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் நியாயமான காரணங்களை கூறுகின்றபோதிலும் வேறு சில காரணங்களுக்காக அந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விதம் பொருத்தமற்றதாகும்.

ஜனாதிபதி தேர்தலின்போது எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிட்ட அவர் பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்ததில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பங்காற்றிய வீரராகவும் இருக்கின்றார் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# சந்தேக நபர்களை விடுதலை செய்வது குறித்து ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

சந்தேக நபர்களை விடுதலை செய்வது குறித்த விடயங்களை ஆராய்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விதம் தொடர்பாக ஏற்கனவே இக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் சுகுந கம்லக் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைகள் மூலமன்றி விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்கள் அனேகமானோர் பாரிய குற்றம் இழைத்துள்ளதாகவும் ஏதேனும் வகையில் சந்தேக நபர்களை விடுதலை செய்வதாயின் சிறைச்சாலையில் உள்ள ஏனைய குற்றவாளிகளையும் விடுதலை செய்ய நேரிடுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நாட்டில் உள்ள சிறைச்சாலைகள் பலவற்றில் சுமார் 10ஆயிரம் வரையான விடுதலைப்புலி சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# யூனியன் வங்கியின் கிளை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யூனியன் வங்கியின் சுன்னாகக் கிளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இல 130, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக யூனியன் வங்கியின் பணிப்பாளர் சபை மற்றும் முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

(6-4)

# சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு முறையான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும்

## கலாநிதி டியூட்டர் வீரசிங்க

(கொழும்பு)

இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் தீர்வு தொடர்பான எண்ணக்கருவை மக்கள் மத்தியில் கொண்டு சென்று ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் நிலைப்படுத்த வேண்டும். இந்த நாட்டின் யுத்தம் வெல்லப்பட்டது என்றால் அது 50 வீதமே வெல்லப்பட்டது. அது நூறு வீதமாக மாறவேண்டுமானால் முறையான அரசியல் தீர்வு சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு வழங்கப்பட வேண்டும் என சிறிபாலி பல்கலைக்கழக பீடாதிபதி கலாநிதி டியூட்டர் வீரசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை வெல்கம்வே விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசியல் தீர்வை நோக்கி ஊடகவியலாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் யுத்தத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எனும் தலைப்பில் இடம்பெற்ற செயலமர்வில் பேசும் போதே பீடாதிபதி இந்த கருத்தை தெரிவித் தார்.

இங்கு கருத்துரைத்த அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் தமது பிரச்சினைகளை நோக்கி கருத்துக்களை தெரிவிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். குறிப்பாக யுத்தம் நடந்த காலத்தில் யுத்தம் தொடர்பாக கருத்துக்களை வெளியிட மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதே போன்று தற்சமயம் அரசியல் தீர்வு தொடர்பான கருத்துக்களை மக்கள் வெளியிட ஊடகங்கள் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பான பின்னணி தொடர்பான சூழலை மக்கள் அறிய சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு அரசியல் வெளிநாட்டு சக்திகள் மத்தியில் இது தொடர்பான அறிவூட்டல் ஊடகங்கள் வாயிலாக வழங்கும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் ஐக்கியம், தேசிய ஒற்றுமை தொடர்பாக அறிந்திருக்க வேண்டும்.

சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளை அரசியல் தீர்வுடன் ஒப்பிட்டு நோக்கி கருத்துக்களை வெளியிட வேண்டும். இதனை வெளியிடும் போது மக்களிடையே ஐக்கியம் ஏற்படும் வகையில் முன்வைக்க வேண்டும்.

உதாரணமாக தீவிரவாதம் ரஷ்யாவின் செல்சனியாவில் நிலவியது. அங்குள்ள அரசு அதனை யுத்தம் மூலம் தீர்க்க முனைந்து அதனை முடிபுக்கு கொண்டு வந்தது.

ஆனால் மறுபுறத்தில் உடனடியாக அரசியல் தீர்வு ஒன் றும் வழங்கப்பட்டது. அதன் மூலம் சாதகமான நிலைமை ஏற்பட்டது.

அவ்வாறே இங்கும் யுத்தம் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் ரீதியான தீர்வுக்கான முனைப்பு காணவில்லை.

இதில் ஜனாதிபதியின் சிந்தனையில் மாற்றம் வந்தால் சாதகமான சூழல் வரும். குறிப்பாக வட கிழக்கில் நடந்த யுத்தத்தை முடிபுக்கு கொண்டு வர வேண்டும் என அவர் சிந்தித்தார். அதனால் சகலவற்றையும் ஒருங்கிணைத்து அதில் வெற்றியும் கண்டார்.

அதேவிதமாக சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு வழங்க வேண்டும் எனச் சிந்திப்பாரானால் அது மிகவும் சாதகமானதாக முடியும். அதற்கான அதிகாரம் தற்சமயம் மக்களால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான சிந்தனை அவருள் வர வேண்டும்.

இங்கு பேசிய ஜெகான் பெரேரா தெரிவிக்கையில்,

தற்போது பலரும் என்னிடம் சமாதானப் பேரவை எதற்கு? நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நாட்டில் யுத்தம் முடிந்து சமாதானம் வந்து விட்டது எனக் கேட்கின்றனர். நடந்து முடிந்த தேர்தலில் சிங்கள மக்கள் ஒரு புறமும் தமிழ் மக்கள் இரு விதமாகவும் வாக்களித்துள்ளனர்.

கடந்த யுத்தம் மூலம் அவர்களின் தலைவர்கள் யுத்த தளபாடங்கள், வாழ்விடங்கள் எல்லாம் அழிக்கப்படுகிறது. அதன் மூலம் சமாதனம் வந்து விட்டது. யுத்தம் இல்லை எனக் கூறப்படுகிறது. ஆனால் நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்களில் மனங்களில் மாற்றம் வரவில்லை.

எனவே இந்த மக்களின் மனது வெல்லப்பட வேண்டும். அதற்கான தீர்வு வழங்கப்பட வேண்டும். ஆகவே அது தொடர்பான விடயங்களை கையாள சமாதானப் பேரவை அவசியமாகின்றது.

இந்த தேர்தல் மூலம் இரு சாராரும் கையாண்ட பிரசார உத்தி காரணமாக இந் நிலை இன்னும் மோசமாக்கப்பட்டுள்ளன.

ஆகவே சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றி சிந்திப்பது தான் இப்பிரச்சினைக்கு முடிவாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். (6)

## அதிர்ஷ்டலாபச்சீட்டின் மூலம் 56 மில்.பவுண்களை பரிசாக வென்ற பிரித்தானிய தம்பதிகள்

பிரித்தானிய தம்பதியர் 56 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட்களை லொத்தர் சீட்டு பரிசாக வென்றெடுத்துள்ளனர்.

பிரித்தானியர்களினால் வெற்றி கொள்ளப்பட்ட மிகப் பெரிய பரிசுத் தொகை இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது. யூரோ மில்லியன்ஸ் லொத்தர் சீட்டிழுப் பின் ஊடாக இந்தப் பரிசுத் தொகை வெற்றி கொள்ளப்பட்டுள் ளது.

குலெஸ்செஸ்டஷெயரைச் சேர்ந்த தம்பதியினரே இவ்வாறு மாபெரும் பரிசுத் தொகையை வெற்றி கொண்டுள்ளனர். மொத்த ஜெக்பொட் பரிசுத் தொகை 112 மில்லியன் ஸ்ரெலிங்பவுண்ட்கள் என லொத்தர் சீட்டிழுப்பு நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

ஸ்பெயினைச் சேர்ந்த நபர் ஒருவர் ஏனைய பணத்தை வெற்றியீட்டியுள்ளார். கடந்த மூன்று மாதங்களில் நான்காவது தடவையாக பிரித்தானியர்கள் 25 மில்லியன் ஸ்ரெலிங் பவுண்களுக்கு அதிகமாக யூரோ மில்லியன் சீட்டிழுப்பின் மூலம் வெற்றியீட்டியுள்ளனர்.

பிரான்ஸ், ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து போர்த்துக்கல் உள்ளிட்ட ஒன்பது நாடுகளில் யூரோ மில்லியன் சீட்டிழுப்பு நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## வேட்பு மனுத்தாக்கலின் பின்னர் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலின் பின்னர் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் அடிப்படையிலான திட்டம் ஒன்றை முன்வைப்போம் என்று கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

இம்முறை தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் புதிய முகங்களை களமிறக்கவுள்ளோம். தேர்தலில் எங்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இதேவேளை எதிரணியினர் இன்று தேர்தல் தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியாமல் உள்ளனர். ஐக்கிய தேசிய கட்சி யானை சின்னத்தில் போட்டியிடும் என்று கட்சியின் செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் அன்னம் சின்னத்தில் போட்டியிட வருமாறு மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியாக செயற்பட்ட எதிர்க்கட்சிகள் இன்று பிரிந்து சென்றுள்ளன. இதன் மூலம் கடந்த தேர்தலில் வைராக்கியம் மற்றும் பொறாமை காரணமாக ஜனாதிபதி மஹிந்த தவை தோற் கடிக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது என்பது தெளிவாகின்றது.

அதனை நாங்கள் அன்றே கூறினோம்.

தேர்தலின் பின்னர் கிராம மட்டத்தில் மக்கள் சபைகளையும் தேசிய மட்டத்தில் செனட் சபையையும் அமைப்பதற்கு அரசியலமைப்பில் மாற்றங்களை செய்ய வேண்டியுள்ளது. அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பாராளுமன்றத் தேர்தலில் எங்களுக்கு கிடைக்கும். தேர்தல் முறை மாற்றங்களுக்கும் நாங்கள் செல்லவேண்டியுள்ளது.

மேலும் நாட்டில் பல துறைகளில் மாற்றங்களை செய்யவேண்டியுள்ளது. முக்கியமாக கடந்த காலங்களில் எமது அரசாங்கத்தில் மிகப் பெரிய அமைச்சரவை உள்ளதாக எதிர்க்கட்சியினர் விமர்சித்து வந்தனர். எனவே அடுத்த அரசாங்கத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு ஜனாதிபதி எதிர்பார்க்கின்றார். அதற்கு ஸ்திரமான பாராளுமன்றம் தேவையாகும்.

ஜெனரல் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நான் எந்தக் கருத்தையும் கூற விரும்பவில்லை. அது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுப்பர் எனினும் பாராளுமன்ற தேர்தலிலும் சரத்பொன் சேகாவை முன் நிறுத்தியே செயற்படப்போவதாக மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்டுள்ளது. (6)

## மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா சிவபாக்கியம்



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவபாக்கியம் அவர்கள் 15.02.2010 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா சந்திரசேகரம் (நீதவான்), கதிராசிப்பிள்ளை ஆகியோரின் ஏகபுத்திரியும், காலஞ்சென்ற சேதுப்பிள்ளை (அச்சுவேலி) ,சிவ்சுப்பிரமணியம் (சட்டத்தரணி) ,பொன்னம்பலம் (புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற V.S கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் DR.K செந்தில்ராதன் (கனடா), செந்தில்ராணி (அதிபர் கோயிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயம்), செந்தில்சோதி, செந்தில்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியர் திருநெல்வேலி R.C.T.M.S), செந்திற்குமார் (கணனி இயக்குநர் சுவிஸ்) ,செந்திற் சேயோன் (கணக்குப் பரிசோதகர் கனடா), செந்திற்குமாரி (கனடா), முன்னாள் நூலக உதவியாளர் சாவகச்சேரி) செந்தில்ராஜன் (சுவிஸ்), செந்திற்செல்வி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பவளராணி,(கணக்காளர் கனடா), முத்துலிங்கம்(பிரதிக்கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி கல்வி வலயம்), காலஞ்சென்ற இந்திரதேவன், பாலகுமார் (அதிபர் யா/செங்குந்த இந்துக் கல்லூரி) ,நிறஞ்சனி ,வாசுகி (கணக்காளர், கனடா) ,லோஜினி, சோமசுந்தரம் (வங்கி முகாமையாளர், கனடா), ஆனந்தராஜன் (முகாமையாளர் ,சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் கிருத்திகன்(பல்கலைக்கழகம், கனடா) தயாபரி(பல்கலைக்கழகம், கனடா) குருபரன் (லண்டன்) , அபிராமி ,அறிவரசி, தாட்சாயினி, (HNB, யாழ்ப்பாணம்), சங்கீதா(இராமநாதன் நுண்கலைப் பீடம்) ,மயூரி, மயூரன் (SWISS) ,பிரவீனா,பிரதீக்கா (கனடா), வைஷ்ணவி (பல்கலைக்கழகம், கனடா), அபினா, அஸ்வின், அச்சுதன், ஆர்ணா, சிந்து ,செந்தூரன் (சுவிஸ்), DR.திவாகர் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஆகியோரின் பேர்த்தியும், துவாரகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.02.2010 புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*மகன் DR.k செந்தில்நாதன்*
*மருமகன் இ.பாலகுமார்*
*(அதிபர் செங்குந்த இந்துக் கல்லூரி)*
*குடும்பத்தினர்.*

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(C-4454)

# பாம்பு



சமீபத்திய-பாம்புக்கடி புள்ளிவிபரம் தெற்காசிய நாட்டினரை கிடுகிடுக்கவைத்துள்து. ஆண்டுதோறும் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகளில் பாம்பு கடித்து மரணத்தை எதிர்கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. உலகில் மற்ற பகுதிகளைக் காட்டிலும் இந்த நாடுகளில் பாம்புக்கடி அதிகமாக இருக்க என்ன காரணம்?

உலகில் சுமார் 3 ஆயிரம் வகை பாம்புகள் உள்ளன. 2 ஆயிரத்து 700 வகைகள் நிலத்திலும், 55 வகைகள் நீரிலும் வாழ்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. நீரில் வாழும் பாம்பு வகைகள் பெரும்பாலும் அதிக விஷமுள்ளவை. நிலத்தில் வசிக்கும் பாம்புகளில் 680-700 பாம்பு வகைகளுக்கு அதிக விஷமுண்டு.

நீர்ப்பாம்பு வகைகளின் அதிகபட்ச நீளம் 2.75 மீற்றர் இருக்கும். நிலத்தில் அதிகபட்ச நீளம் 10.7 மீற்றர் அமேசன் காட்டுப் பகுதியில் அறியப்படாத மிக நீண்ட பாம்பு வகைகள் வாழ்வதாக உயிரியலாளர்கள் கூறுகின்றனர்.

மலைப்பாம்புகள் சராசரியாக 10.7 மீற்றர் நீளமும், 230 கிலோ எடையும் கொண்டவை.

எல்லாவற்றிலும் கொடிய விஷம் உடையது ராஜநாகம். அவுஸ்திரேலிய கண்டத்தில் அதிக விஷமுள்ள பாம்புகள் வாழ்கின்றன.

உலக மக்களில் சராசரியாக 30 இலட்சம் பேர் கொடிய விஷப்பாம்புகளின் கடிக்கு ஆண்டுதோறும் ஆளாகின்றனர். இதில் ஒரு இலட்சசத்து 25 ஆயிரம் பேர் இறக்கின்றனர்.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 8 ஆயி ரம் பேர் பாம்புக் கடியால் இறக்கின்றனர். ஐரோப் பாவில் பாம்புக்கடிக்கு சுமார் 5ஆயிரம் பேர் இறப் பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன்.

பாம்புக்கடியால் தெற்காசியாவிலேயே அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்தியாவில் ஆண்டுக்கு சராசரியாக 80 ஆயிரம் பேரை பாம்புகள் கடிக்கின்றன.

இவர்களில் 11 ஆயிரம் பேர் மரணத்தைத் தழுவு கின்றனர். அடுத்த இடத்தைப் பிடிப்பது இலங்கை. இங்கு பாம்புக்கடிக்கு ஆளாகும் 33 ஆயிரம் பேரில் 7 ஆயிரம் பேர் ஆண்டு தோறும் மரணிக்கின்றனர்.

மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் நாடு பங்களாதேஷ். ஆண்டுக்கு 6 ஆயிரத்து 500 பேர் மடிகின்றனர். இந்நாட்டில் ஒரு இலட்சம் பேரில் 623 பேரை பாம்புகள் கடிக்கின்றன.

தெற்காசியாவில் பாம்பு கடித்து உயிர் விடுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க போதிய விழிப்புணர்வு இல்லாமையே காரணம். இங்கு பாம்பு தீண்டியவர்களில் 86 சதவிகிதம் பேர் உடனே மருத்துவமனை செல்வதில்லை.

மந்திரித்து விடுவது, வழிபாட்டுத் தலங்களில் படுக்க வைத்து விடுவது, பச்சிலைகளை அரைத்து பத்து போடுவது போன்றவை பாம்புக்கடிக்கு தீர்வு தந்துவிடும் என்று



நம்புகின்றனர். இது சமீபத்தில் அவுஸ்திரேலிய நாட்டுக கேஸ்டில் பல்கலைக்கழகம் தெற்காசிய நாடுகளில் நடத்திய ஆய்வு முடிபு.

### பாம்பு கடித்தால் என்ன முதலுதவி செய்ய வேண்டும்?

கடிபட்ட இடத்தில் குழாய் நீரை வேகமாகத் திறந்து விடவேண்டும். சோப்பு போட்டு 3 முறை கழுவவேண்டும். பொதுவாக பாம்புக்கடிக்கு ஆளானவர் பதற்றம் அடைவார். இதனால் இதயத் துடிப்பு அதிகரிக்கும். இதயத்துடிப்பை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பாம்பு கடித்தால் உடனே ஊரே கூடிவிடும். அதைத் தவிர்க்க வேண்டும். பாம்பு கடித்தவுடனேயே சிலர் அதைத் தேடுவதிலேயே குறியாக இருப்பார்கள். *பாம்புக்கடிக்கு ஆளானவருக்குத்தான் மருத்துவம்... பாம்புக்கு அல்ல* என்பதை புரிந்து கொள்ளவேண்டும். உடனே மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுவிட வேண்டும்.

நச்சு எதிர்ப்பு மாத்திரைகள் எல்லாம் வைத்தியசாலைகளிலும் உள்ளன. உடனே வைத்தியசாலைக்கு கொண்டு போய் விட்டால் காப்பாற்றிவிடலாம். இதயத்திற்கு அருகே பாம்பு கடித்தால் விரைவில் மரணம் ஏற்படும்.

அப்படியிருப்பின் இன்னும் துரிதமாகச் செயல்பட வேண்டும். பாம்பு கடித்தவரை நடக்க வைக்கக்கூடாது. அப்படிச் செய்தால் இரத்த ஓட்டம் அதீகரித்து நரம்பு மண்டலம் பாதிக்கப்படும்.

பாம்பு கடித்த நேரம், பாம்பின் விபரங்கள் தெரிந்தால் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். இது சிகிச்சையைத் தீவிரப்படுத்த உதவும்.

பாம்பு நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில், இரவு நேரத்தில் கிராமப்புறங்களில் நடந்து வரும்போது முழங்கால் அளவு வரை உள்ள பிரத்யேக காலணிகளை அணிவது நல்லது.

உயிரைப் பறிக்கும் பாம்புகளே மனிதனின் உயிரையும் காக்கின்றன. பாம்பின் விஷத்தில் இருந்து பல நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

பொதுவாக பாம்புகள் யாரையும் தீண்டுவதில்லை. தற்காப்புக்காகவே கடிக்கின்றன.

பாம்பை செல்லப்பிராணியாக வளர்க்கும் மனிதர்களும் இருக்கவே செய்கிறார்கள்!. இலங்கையைப் பொறுத்தவரை பாம்பு கடவுள் மட்டுமல்ல எமனும் கூட!.




## ஆடு பாம்பே!

- இந்தியாவில் உ.பி மாநிலம் வாரணாசி பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பாம்புகள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.
- அண்டார்டிக்கா கண்டத்தில் குளிர் அதிகமாக இருக்கும் என்பதால் இங்கு பாம்புகள் உயிர் வாழ்வதே இல்லை. பாம்பின் இரத்தம் உறைந்து போய்விடுவதே காரணம்.
- உலகிலேயே மிகப் பெரிய பாம்பு இனம் அமேசன் காடுகளில் வாழும் பச்சைநிற அனகோண்டா பாம்புகள். நீளம் 10.7 மீற்றர்.
- மிகவும் சிறிய பாம்பு சமீபத்தில கரீபியன் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்டது. மண்புழுவின் அளவில் 10 செ.மீ நீளம் மட்டுமே உள்ளது இது.

## செய்யக்கூடாதவை!

- பாம்பு கடித்த இடத்தில் கட்டுப்போடக்கூடாது. இப்படிச் செய்தால் விஷம் ஓரிடத்திலேயே தங்கி பாதிப்பை ஏற்படுத்தும்.
- சினிமாவில் வருவதைப் போல கடிபட்ட இடத்தில் வாயை வைத்து உறிஞ்சக்கூடாது. வாயில் புண் இருந்தாலோ அல்லது நாக்கை வைத்து உறிஞ்சினாலோ முதலுதவி செய்பவரும் பாதிப்புக்கு உள்ளாகலாம்.
- கடிபட்ட இடத்தை கூரிய ஆயுதங்களால் கிழிக்கக்கூடாது. இது கடிதடத்தை காணாமல் செய்து விடும். மருத்துவர் சிகிச்சை அளிக்க சிக்கலை ஏற்படுத்திவிடும்.
- மருத்துவர் அனுமதியின்றி எந்த மருந்து மாத்திரைகளையும் கடிபட்டவருக்கு கொடுக்கக்கூடாது.

## பறக்கும் மீன்



ஆந்தை, காகம், குருவி, கழுகு போன்ற பறவை இனம் மட்டுமே பறக்கும் என்றில்லை. கடலில் வாழும் ஒரு வகை மீனும் பறக்கும். மீன் பறக்குமா? தண்ணீரை விட்டு வெளியே வந்த உடனேயே உயிர் துடிக் ஆரம்பித்துவிடும்.

அப்படியிருக்கையில் மீன் எப்படி பறக்கும்? என்று மண்டையைப் போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். எக்லோகோடைடே (Exocoetidae) என்ற மீன் பறக்கும் வல்லமை உடையது. இதை பறக்கும் மீன் என்றே அழைக்கின்றனர்.

அட்லாண்டிக், பசுபிக், இந்தியப் பெருங்கடலில் இந்த பறக்கும் மீன் அதிகம் காணப்படுகிறது.

பொதுவாக மீன்கள் நீந்த அதன் இறக்கைகளை (Fin) பயன்படுத்தும்.

பறக்கும் மீன் அதை பறக்கவும் பயன்படுத்திக் கொள்கிறது. இதன் இறக்கை மற்ற மீன்களுக்கு உள்ளது போல் இல்லாமல் பெரிதாகவும், பறவைகளுக்குஇருப்பதுபோலும் உள்ளது.

அதனால், கடல் நீர் மட்டத்தில் இருந்து 160 அடி உயரம் வரை எக்ஸோகோடைடே வால் பறக்க முடிகிறது.

பறக்கும் மீனின் வால் நிமிடத்திற்கு 70 முறை வேகமாக ஆடும். அதன் பின்னர் தன் இறக்கையை விரித்து டொல்பின் போல தண்ணீரில் இருந்து மேலே எழும்பிப் பறக்கிறது. சுமார் 400 மீற்றர் தூரம் வரை இந்த மீன் பறக்கும்.

காற்று வேகமாக அடிக்கும் போது மணிக்கு எழுபது கிலோ மீற்றர் வரை பறக்கும். தண்ணீரில் செல்லும் போது மட்டும் இறக்கைகளை மடித்துக் கொள்ளும். கடல் பரப்பில் வளரும் *பிளாங்க்டன்* என்ற கடல் பாசியை உணவாக உட்கொள்கிறது எக்ஸோகோடைடே.

AROUND THE WORLD

## உலகைச் சுற்றி

ஆர்.யூ.பாலமுருகன்

### புலி டிரஸ்!



தென்கிழக்கு ஆசிய நாடுகளில் புலிகளின் எண்ணிக்கை அதலபாதாளத்தில் சென்றுவிட்டது. அந்த நாடுகளில் 350 புலிகள் மட்டுமே இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, புலியினத்தைக் காப்பாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளது சர்வதேச விலங்குகள் நலநிதியம்.

தாய்லாந்து நாட்டு விலங்கியல் பூங்காவில் பிறக்கும் புலிக்குட்டிகளுக்கு தனி மரியாதையுடன் ராஜ உபசாரமும் நடக்கிறது.

இதன் ஒரு பகுதியாக புலிகளுக்கு உடை கூட வழங்கப்படுகிறது. பிறக்கும் புலிக்குட்டிகளுக்கு பாரம்பரிய உடையையும் அணிவிக்கின்றனர்!

### படகில் பயணம்

அவுஸ்திரேலிய சினிமா இயக்குனர் ரிச்சாட் பெய்ன். 45 வயதான இவர் கடல் தண்ணீர் அசுத்தமாவது பற்றி மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். இதன் ஒரு பகுதியாக ஜப்பானில் இருந்து அமெரிக்காவுக்கு 9 ஆயிரம் கி.மீ தொலைவுக்கு இராட்சத பிளாஸ்டிக் படகில் இந்த ஆண்டு பயணம் செய்ய இருக்கிறார். கப்பல்களில் இருந்து கொட்டப்படும் கழிவுப் பொருட்களாலும், ஏற்படும் விபரீதங்களை உணர்த்தவே இந்த வித்தியாச எதிர்ப்பு பயணம்.

# ஜனாதிபதி மஹிந்தவின் புதிய அரசியல் நகர்வு அரசியலின் உறுதிக்கு அச்சுறுத்தலாகுமா?

அனைத்துலகத்தின் பார்வைகளின் மையப்புள்ளியாக முன்னர் மத்திய கிழக்கு வளைகுடா நாடுகளும் ஆபிரிக்கா நாடுகளும் திகழ்ந்தன. ஆனால் தற்போது இலங்கை உருவெடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை (8) நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் கொழும்பின் மையப் பகுதியில் உள்ள எதிர்க்கட்சிகளின்



பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலகத்தைச் சுற்றிவளைத்து அவரை கைது செய்தனர். பின்னர் வெளியில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ கவச வாகனத்திற்குள் வைத்து தாக்கிய பின்னர் இனம்தெரியாத இடத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

காலிலும் மார்பிலும் காயமடைந்த பொன்சேகா கடற்படைத் தலைமையகத்தில் தடுத்து வைக் கப்பட்டுள்ளார். அங்கு அவர் துன்புறுத் தப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசின்



இந்த நடவடிக்கையானது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே இருந்தபோதும் எதிர்த்தரப்புக்கும் அனைத்துலகத்திற்கும் பலத்த பின்னடைவாகும்.

கடந்த மாதம் 26ஆம் திகதி தேர்தல் நிறைவுபெற்றதும் அரசு முதலில் இராணுவ கட்டமைப்புக்குள்ளும் பின்னர் காவல்துறை கட்டமைப்புக்குள்ளும் களையெடுப்புக்களை மேற்கொண்ட பின்னரே பொன்சேகா மீதான கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் பொன்சேகாவின் கைதினால் இராணுவத்திற்குள் ஏற்படும் முரண்பாடுகளைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கையையும் எடுத்திருந்தது.

இராணுவத்தில் சேவையில் இருந்த பெருமளவான உயர் அதிகாரிகள் விலக்கப் பட்டது இது இரண்டாவது தடவை. 1999ஆம் ஆண்டு பெருமளவான களமுன்னணி தளபதிகள் விலக்கப்பட்டனர். ஆனால் அப் போது படைத்துறைக் காரணங்கள் முன் வைக்கப்பட்டபோதும் தற்போது அரசியல் காரணங்கள் முன்வைக்கப்படுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏறத்தாழ 40 இராணுவ உயர் அதி காரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதுடன் 208 காவல்துறை அதிகாரிகளும் இட

மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அரசிற்கு எதிராக செயற்பட்டுள்ளனர் என்ற அரசியல் காரணங்களை முன்வைத்து இராணுவத்தில் இருந்து 14 அதிகாரிகள் விலக்கப்பட்டுள்ளனர்.

இந்த அதிகாரிகளில் 5 மேஜர் ஜெனரல்கள்,5 பிரிகேடியர்கள், ஒரு கேணல், ஒரு லெப். கேணல், இரண்டு கப்டன் தர அதிகாரிகள் உள்ளடங்கியுள்ளனர். 1992ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்ட இராணுவச் சட்டத்தின் பிரகாரம் இராணு வத் தளபதி இந்த நடவடிக் கையை மேற்கொண்டுள் ளார்.

இவ்வாறு விலக்கப்பட்ட வர்கள் ஓய்வுபெற விண்ணப் பிக்கலாம் அல்லது பதவியை விட்டு விலகலாம். அவ்வாறு விண்ணப்பம் செய்பவர்கள் பாதுகாப்பு செயலாளருடன் கலந்தாலோசித்து அதனை மேற்கொள்ளலாம். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் விலக்கப்பட்ட அதிகாரிகள் வருமாறு;

மேஜர் ஜெனரல் ஜம்மிக்கா லியனகே - இராணுவத்துணை படைக் கட்டளை அதிகாரி, மேஜர் ஜெனரல் ராஜிதா டி சில்வா- பிரதம பாதுகாப்பு அதிகாரியின் உதவி அதிகாரி, மேஜர் ஜெனரல் ஜயந்தா பெரேரா - சீனாவில் உள்ள தேசிய பாதுகாப்பு பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த சமயம் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சமந்தா சூரியபண்டாரா - முன்னாள் 53ஆவது படையணியின் கட்டளை தளபதி, தற்போது வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர்.

மேஜர் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்கா- இராணுவத் தலைமையகத்தின் பிரதம அதிகாரி, பிரிகேடியர் பிமல் டயஸ்- முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி , பிரகேடியா துமிந்தா கெப்படிவலனா- அம்பாறை மாவட்ட இராணுவப் பயிற்சிக் கல்லூரி கட்டளை அதிகாரி, பிரிகேடியர் ஜனகா மகோத்தி - 22ஆவது படையணியின் விநியோக இணைப்பதி காரி, பிரிகேடியர் அத்துலா ஹென்னெடிகே-22 ஆவது படையின் முதலா வது பிரிகேட்டின் கட்ட ளைத் தளபதி , பிரிகேடியர் வசந்தா குமரப்பெருமா-55ஆவது படையின் 3ஆவது பிரிக்கேட்டின் கட்டளைத்தளபதி, கேணல் திலக் உபயவர்த்தனா- இராணுவக் காவல்துறை கட்டளை அதிகாரி, லெப். கேணல் எல். ஜே. எம்.சி. பி.ஜெயசுந்தரா- விஜயபா இலகுகாலாப்படை றெஜி மென்ட் பற்றலியன் கட்டளை அதிகாரி, கப்டன் ஆர். எம். ஆர் .ரணவீரா -விஜயபா இலகு காலாட்படை றெஜிமென்ட் தூக்குதல் கட்டளை அதிகாரி, கப்டன் பி. கிருசாந்தா - தேசிய காவல்படை கொம்பனியின் கட்டளை அதிகாரி. இலங்கையின் வர லாற்றில் பெருமளவான படையினர் இரா ணுவத்தை விட்டு விலக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.



1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையை தொடர்ந்து இராணுவ விசாரணைகளை மேற்கொண்டு பெருமளவான அதிகாரி களை கட்டாய ஓய்வில் அனுப்பியிருந்தது.

அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் உத்தரவுக்கு அமைவாக இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரிய அதனை மேற்கொண்டிருந்தார்.

இராணுவ நீதிமன்ற விசாரணைகளை மேற்கொண்ட அன்றைய இராணுவத்தில் தலைமை அதிகாரி லயனல் பலகல்ல 7 மூத்த அதிகாரிகளை இராணுவத்தில் இருந்து நீக்கியிருந்தார். அன்று நீக்கப்பட்ட அதிகாரிகள் விபரங்கள் வருமாறு,

மேஜர் ஜெனரல் வசந்தா பெரேரா - வன்னி மாவட்ட கட்டளை தளபதி, மேஜர் ஜெனரல் காமினி குணசேகரா-56 ஆவது படையணியின் கட்டளை தளபதி,பிரிகேடியர் ரி. எம். பொஹறான் -55 ஆவது படையணியின் கட்டளை தளபதி , கேணல் அதுலா லங்காதேவா-56 ஆவது படையணியின் முதலாவது பிரிகேட்டின் கட்டளை தளபதி,

மேஜர் பி.வி.யூ.சந்திரசிறி -இலங்கைத் தேசிய பாதுகாப்பு காவல்படையின் 20 ஆவது பற்றலியன் கட்டளை அதிகாரி, மேஜர் மோரா முடலி கெமுனுவோச் -11 ஆவது பற்றலியன் பிரதி கட்டளை தளபதி, மேஜர் எம்.எ. இலங்க சிங்கா -சிங்க றெஜிமென்ட் 15 ஆவது பற்றலியனின் கட்டளை அதிகாரி.

1999ஆம் ஆண்டு வன்னிப்படை நட வடிக்கையில் ஏற்பட்ட தோல்விக்கு பொறுப்பானவர்கள் என்ற காரணத்தினால் மேற்கூறப்பட்ட அதிகாரிகள் இராணு வத்தில் இருந்து விலக்கப்பட்டனர்.

எனினும் அவர்கள் மீதான விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்கள் தமது வாதங்களைக் கூற அனுமதிக்கப்பட் டனர். அவர்கள் தமது தவறுகளை மறுத்த போதும் சந்திரிக்காவின் உத்தரவுகளுக்கு அமைய அவர்கள் விலக்கப்பட்டனர்.



அப்போது விலக்கப்பட்ட இராணுவ அதிகாரிகள் தமது வாகனங்களை ஒரு மாதம் பயன்படுத்தவும், இராணுவ விடு திகளில் தங்கியிருப்பதற்கு அவர்களுக்கு மூன்று மாதம் அவகாசமும் வழங்கப் பட்டிருந்தன.

ஆனால் தற்போதைய நடவடிக்கைகள் மிக வேகமாக நடைபெற்று வருவதுடன் ,

அரசியல் பழிவாங்கல்களும் அச்சமுமே அதற்கான காரணங்களாக கூறப்ப்டுகின்றன.

அரசியல் காரணங்களுக்காக பெரும் அளவான அதிகாரிகள் விலக்கப்பட்டுள்ள அதே சமயம், ஜெனரல் பொன்சேகாவின் விவகாரத்தில் அரசு அவர் மீது பின்வரும் பிரதான குற்றச்சாட்டுக்களை முன் வைக்க முனைந்துள்ளது

**சீருடையுடன் அரசியல் பணி களில் ஈடுபட்டது.**

**ஜனாதிபதிக்கு எதிராக சதி செய்ய முற்பட்டமை.**

**இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற 1500இற்கும் மேற் பட்டவர்களுக்கு புகலிடம் அளித்தமை.**

**ஆயுதக்கொள்வனவில்**



**ஊழல்கள் புரிந்தமை.**

இந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் பொன்சேகா மீதான நடவடிக்கைக்கு அரசு தயாராகி வருகின்றது.

ஆனால் அதன் முக்கிய நோக்கம் வேறு. அதாவது எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதும், அரசியலில் இருந்து பொன்சோகவை அகற்றுவதுமேயாகும்.

அதன் மூலம் இலங்கையின் நாடாளுமன்றத்தேர்தலில் வெற்றி பெற்று மஹிந்த தனது சொந்த நாடாளு மன்றத்தை

**வேல்ஸிலிருந்து அருஷ்**

உருவாக்க முனைகின்றார் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. ஆனால் எதிர்க்கட்சிகள் முற்றாக முடக்கப்பட்ட நிலையில் இலங்கை சீனாவின் மற்றும் ஒரு பர்மாவாக மாற்றம் பெறுவதை மேற்குலகம் அனுமதிக்கப் போகின்றதா? என்பதில் தான் பொன் சேகாவின் எதிர்காலம் தங்கியுள்ளது.

மேலும் இராணுவத்திற்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ள மஹிந்தவின் புதிய அரசியல் நகர்வு தென்னிலங்கையின் அரசியலின் உறுதித்தன்மைக்கு நீண்ட காலத்திற்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்பதையும் நாம் மறுக்க முடியாது.

*நன்றி: ஈழமுரசு*

# மாசி மாதப் பலன்கள்

## தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம், முதலாம் பாதம்)*

மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சி காணும் தனுசு ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாத தொடக்கத்திலேயே, ராசிநாதன் குரு ஒன்பதுக்கு அதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிப்பதால் தொட்ட காரியங்கள் துலங்கும். தொல்லைகள் அகன்றோடும். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வீடு வாங்கும் முயற்சியில் காட்டிய ஆர்வம் கை கூடும்.

ஜென்ம ராகு சிறுசிறு பிரச்சினைகளைக் கொடுத்தாலும் முடிவு நல்ல முடிவாக ஏற்படும். பொதுநல ஈடுபாட்டில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். சப்தம ஸ்தானத்தில கேது சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

பத்தில் உள்ள சனி வக்ரம் பெற்றிருப்பதால் கூட்டாளிகளிடம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வகையில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம்.

எதிரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் இனிய பலன்களை எதிர்கொள்ளலாம். மாதத்தொடக்கத்தில் அஷ்டமாதிபதி சந்திரனை விரயாதிபதி செவ்வாய் பார்ப்பதால் திடீர் திருப்பங்கள் பலவும் சந்திக்க நேரிடும். பயணங்களால் பலன் கிடைக்கும்.

7,10க்கு அதிபதியாகன புதன் பெப்ரவரி 19 ஆம் திகதி முதல் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிபிற்கு வரும்.

மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மனைவி, மக்களால் ஆதாயம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பழைய கூட்டாளிகள் உங்களை விட்டு விலகி விட்டார்களே என்ற கவலை இனி அகலும். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து தொழிலை வளப்படுத்த முன்வருவர். பகல், இரவாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்களுக்கு நன்மை செய்ய முன்வருவர்.

உங்கள் ராசிக்கு 6, 11 க்கு அதிபதியான சுக்கிரன், நான்காமிடத்தில் மார்ச் 3 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். இதன்

**சிவல்புரி சிங்காரம்**

விளைவாக இடம், பூமியால் வாங்கிய கடன் சுமைகளிலிருந்து விடுபடுவீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு கிட்டும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் வந்து சேரும்.

மார்ச் 8 ஆம் திகதி முதல் மாதக்கடைசி வரை எதிர்பாராத நற்பலன்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகின்றன. 7,10க்கு அதிபதி நீச்சம் பெறுவதால் திட்டமிடாது செய்த காரியங்களில் சில வெற்றி பெறும்.

திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து செயல்படுவர். கட்டளைக்கு அடிபணிய வைத்திருக்கும் ஆட்களில் சிலரை மாற்றம் செய்வீர்கள். வி.ஐ.பி.க்களின் சந்திப்பு கிடைக்கும். இம்மாத கிரக நிலைகளில் பல கிரகங்கள் சாதகமாக உலா வருவதால் துணிச்சலாக செயல்பட்டு வெற்றி காண இயலும்.

இம்மாதம் வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள துர்க்கையை வழிபட்டு வருவது நல்லது.

## மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்)*

எதிர்காலச் சிந்தனையிலேயே எப்பொழுதும் இருக்கும் மகர ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தனஸ்தானத்தில் விரயாதிபதியும், அஷ்டமாதிபதி சூரியனும் இணைந்து சஞ்சரிப்பதால் வருமானம் எதிர்பார்த்தபடி, வந்தாலும், செலவுகளும் அதிகரிக்கும். குருவின் பலம் நன்றாக இருப்பதால் சென்ற மாதத்தைக் காட்டிலும், இம்மாதம் சிறப்பாகவே அமையும்.

ஆறாமிடத்திற்கு அதிபதியும், சப்தமாதிபதியும் இணைந்து மாதத் தொடக்கம் அமைவதால் குடும்பத்தில் குழப்பங்களும், பங்காளி வகையில் பிரச்சினைகளும் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பொறுமையோடு செயல்பட்டு எதையும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து முடிவெடுப்பதே நல்லது.

ராசிநாதன் சனி வக்ரம் பெற்றிருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். மாதத்தின் கடைசி வாரத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சியான செய்தி வந்து சேரும். கடல் தாண்டி வரும் செய்தி காரிய வெற்றிக்கு உறுதுணை புரியும்.

எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகிய ஆதிபத்யங்களுக்கு அதிபதியான புதன் பெப்ரவரி 19 ஆம் திகதி கும்பராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வாங்கல் – கொடுக்கல்கள் ஒழுங்காகும்.

வருங்கால நலன் கருதி எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களால் ஏற்பட்ட தகராறுகள் அகலும், வழக்குகள் நல்ல முடிபிற்கு வரும். உறவினர்கள் உங்கள் சொல்லுக்கு கட்டுப்பாட்டு நடப்பர். தாயின் உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை.

இதுவரை தடைகளும், தாமதங்களும் ஏற்பட்டனவே என்று கவலைப்பட்டவர்கள் மார்ச் 3ஆம் திகதிக்கு மேல் சில காரியங்களில் அனுகூலம் ஏற்பட்டு மகிழ்ச்சி காண்பர். விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். சகோதர வழியில் சந்தோஷமான தகவல்களும், அதன் மூலம் சில விரயங்களும் ஏற்படலாம்.

ஆறுக்கு அதிபதி புதன் நீச்சம் பெறும்பொழுது, ஆரோக்கியம் சீராக்கி ஆனந்தப்படுத்தும்.

உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும். தந்தை வழி உறவினர்களால் தலைதூக்கிய பிரச்சினை நல்ல முடிபிற்கு வரும்.


வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிரிகள் விலகுவர். இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவீர்கள். நட்பு வட்டம் விரியும். பாகப்பிரிவினைகளால் பலன் கிடைக்கும் வாய்ப்பு கிட்டும்.

இம்மாதம் இனிய பலன்கள் உண்டாக, கண்ணன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. கண்ணன் வழிபாடு கவலை போக்கும்.

(தொடரும்)

## அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி மேற்கொண்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை

### ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவும் ஜே.வி.பி. கட்சியும் இணைந்து சினமன் லேக் சயிட் ஹோட்டலில் அரசாங்கத்தை கவிழ்க்கும் சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்ததாக அரசாங்கம் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான எந்தவொரு சூழ்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை தெரிவிக்க முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எந்த விதமான ஆதாரங்களும் இன்றி ஜெனரல் சரத் பொன்சேகாவும் மேலும் 50 படையதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பி கட்சி வழமையான தமது அரசியல் நடவடிக்கைகளை மட்டுமே முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (6)

## ரவூப் ஹக்கீமின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின்தலைவர் ரவூப் ஹக்கீமின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரணி அரசியலில் ஹக்கீம் மும்முரமாக செயற்பட்டு வருவதை அடுத்தே இந்த நடவடிக்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இதன் அடிப்படையில் ஹக்கீமுக்கு வழங்கப்பட்டிருந்த நான்கு பொலிஸாரும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து ரவூப் ஹக்கீமின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அச்சம் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்புகள் தெரிவித்துள்ளன. (6)

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் குறித்த வீடியோ நாடாவை நீதிமன்றில் ஒப்படைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கடந்த வாரம் பொதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் காட்சிகளைக் கொண்ட வீடியோ நாடாவை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் சம்பா ஜானகி இர்ராஜரத்தினத்தினால் ஐந்து தொலைக்காட்சி நிறுவனங்களின் செய்திப் பணிப்பாளர்களுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (6-14)



பல்கலைப் புலவர் அமரர் க. சி. குலரத்தினம் எழுதிய இந்து போர்ட் இராசரத்தினம் – காலமும் வாழ்வும் என்ற நூலின் வெளியீட்டு விழா திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சங்கத் தலைவர் அ. தற்பரானந்தன் தலைமையுரையாற்றுவதையும் பேராசிரியர் க. கந்தசாமி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

கண்ணீரின் மொழி அழுத கண்கள் உடையவனுக்கு மட்டும்தான் தெளிவாகப் புரியும்.
– இந்தியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# கொழும்புத்துறையில் நடந்த நெஞ்சை வலிக்கும் சோகம்

மர்மப்பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய போது அது வெடித்ததில் இரண்டு மாணவச் செல்வங்கள் பலியாகிப்போன செய்தி நெஞ்சை நெருடுகின்றது.

கூடவே எட்டு மாணவர்கள் படுகாயம் அடைந்தனர். இத்துயரச் சம்பவம் நொந்து போன மனங்களை மேலும் வதைப்பதாக அமைகின்றது.

அறியாப் பருவம். எதை எடுத்தாலும் அதனை விளையாட்டுப் பொருளாகப் பார்க்கும் இயல்பு. இதுவே இரண்டு பிஞ்சுகளை பலியெடுத்து விட்டது.

பெரியவர்களின் பொறுப்பற்ற தன்மையால் அந்தப் பிஞ்சுகள் பலிகொடுக்கப்பட்டனர் என்றே கூறவேண்டும்.

துப்பரவுப் பணியில் ஈடுபட்டவர்கள் அங்கு கிடந்த மர்மப் பொருளை–வெடிகுண்டை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு தெரியப்படுத்தி அதனை அழித்திருந்தால் இந்த நிட்டூரம் நடந்திருக்க மாட்டாதல்லவா?

பெரியவர்கள் பொறுப்புடன் நடக்க வேண்டும். ஆனால் எங்கள் மண்ணில் 'பொறுப்பற்ற தன்மை' எங்கும்–எதிலும் வியாபகம் பெற்றிருப்பதை காணமுடிகின்றது.

கொழும்புத்துறையில் நேர்ந்த துயரத்திற்கும் பெரியவர்களின் பொறுப்பற்ற தன்மையே காரணம் என அடித்துக்கூற முடியும்.

இதைவிட சிறுவர்கள் வெடிக்குண்டை வைத்து விளையாடும்போது அதனைச் சிலர் கண்டதாகவும் கூறப்படுகின்றது.

இவர்கள் அந்தச் சிறுவர்களுக்கு நிலைமையை எடுத்துக்கூறியிருந்தால், இரண்டு மாணவர்கள் பலியாகவும் எட்டு மாணவர்கள் படுகாயமடையவும் காரணமாக இருந்த அனர்த்தம் தடுக்கப்பட்டிருக்கும்.

இருந்தும் நெஞ்சை வலிக்கும் அந்த அனர்த்தம் நடந்து முடிந்து விட்டது.

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நிகழாதிருப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதே இன்றைய தேவையாகும்.

அதிலும் குறிப்பாக தற்போது யாழ். குடாநாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால், பற்றைகள் மற்றும் புற்கள் வெட்டப்படும் பணி தீவிரமடைந்துள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் வெடிபொருட்கள் மீட்கப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. எனவே இது விடயத்தில் பொதுமக்கள், பொது அமைப்புக்கள் விழிப்பாக இருப்பதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தகவலைக் கொடுத்து வெடிபொருட்களை உடனடியாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து எங்களுக்கென்ன என்ற நினைப்புடன் இருந்தால் கண்ணீரும் கவலையும்தான் எங்களின் உரிமையாகிப்போகும்.

# மனித தத்துவத்தை விளக்கும் திருநீற்றுப் புதன்

விஞ்ஞானத்தின் விந்தைகளில் வியந்து நிற்கும் மனிதம் கணனியில் கண்டதையும் கண்டுகொள்ளும் யுகத்தில் நடைபோட்டுக்கொண்டு இருக்கின்றான். அவன் இன்னும் எத்தனையோ அறிவியல் முன்னேற்றத்தை எட்டிப் பிடித்தாலும் மறுபக்கத்தில் தன்னில் ஒரு வெறுமை இருப்பதை உணருகின்றான். தனக்கு மேல் ஒரு சக்தி இருப்பதை ஏற்றுக் கொள்கின்றான்.

தனக்கு மேல் உள்ள அந்த சக்தியை கடவுள் என இனம் கண்டு அதனோடு உறவு கொள்ள சடங்குகளை திருவழி பாட்டில் உருவாக்குகின்றான். மனித மனங்களை இணைக்கின்றன. இத் திருவழிபாட்டுச் சடங்குகளில் திரு அடையாளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இத் திரு அடையாளங்கள் வழிபாட்டை மென்மேலும் பண்படுத்தி செயல் வடிவம் கொடுத்து உயிர்ப்பூட்டி வளப்படுத்துகின்றது என்றால் மிகையாகாது.


திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தில் தவக்காலமும் அல் லது மனமாற்றத்தின் காலமும் ஒன்றாகும். இக்காலம் திரு நீற்று புதனுடன் ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் திருப் பலிப் பூசையில் பங்கு கொள்பவர்களின் நெற்றியில் சாம்ப லால் சிலுவை அடையாளம் இடப்படுகின்றது. ஏன் சிலுவை அடையாளம் சாம்பலால் இடப்படுகின்றது.பலரும் வியந்து விடை தேடும் வினாதான் இது.

திருவிலிவியத்தில் மனிதனுடைய பலவீனத்தையும், அழிவையும் குறிக்கும் ஓர் அடையாளமாக சாம்பல் சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை பல இடங்களில் நாம் காணலாம். அத்துடன் சாம்பல் மனமாற்றத்தை குறிக்கும் ஓர் அடையாளமாகவும் திருவிலிலியத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

சோதோம் நகரை அழிவில் இருந்து காப்பாற்ற ஆபிர காம் இறைவனிடம் பரிந்து பேசிய போது தூசியும் சாம்பலுமாகிய நான் என் தலைவருடன் பேசத் துணிந்து விட்டேன் என்று தனது பலவீனத்தை வெளிப்படுத்துகின்றார். (தொ.நூ 18.27)

பலதீமைகளை செய்து பரமனுக்கு தொலைவில் இருந்த நினைவே மக்கள் இறைவனின் தண்டனையில் இருந்து தப்பி அவரோடு தம்மை ஐக்கியப்படுத்திக்கொள்வதற்காக மனம் மாறுகையில் சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பலின் மீது உட்கார்ந்தார்கள் என்று திருவிலிவியத்தில் (யோனா 3:6 கூறப்படுகின்றது.

இஸ்ராயேல் மக்கள் மீது வரவிருந்த அழிவை முன் குறித்து அதிலிருந்து விடுபடுவதற்காக எரேமியா இறைவாக்கினர். "ஓ மகளாகிய என் மக்களே! சாக்கு உடை உடுத்துங்கள், சாம்பலில் புரளுங்கள், இறந்த ஒரே பிள்ளைக்காகத் துயருற்று அழுவது போல் மனமுடைந்து அழுதுபுலம்பங்கள். ஏனெனில், அழிப்பவன் திடீரென நமக்கு எதிராக வருவான்" (ஏரேமியா 6:26) என இஸ்ராயேல் மக்களுக்குக் கூறி மனம்திரும்பும் படி வேண் டினார்.



திருந்த மறுத்த கொராசின் பெத்சாய்தா நகரங்களுக்கு சாபமிடுகையில் இயேசு கொராசின் நகரே உனக்குக் கேடு. பெத்சாய்தா நகரே உனக்குக் கேடு. ஏனெனில், உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர் சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர். (மத்: 11.21) என்றார்.

தாமார் தன் பாவத்திலிருந்து மனம் திரும்பும் பொருட்டு தன் தலை மீது சாம்பல் தூவினாள். தன் மீது இருந்த பல வண்ண ஆடையைக் கிழித்தாள் (2 சாமுவேல் 13:19) என வேதம் கூறுகின்றது. மொர்தக்காய் தம் ஆடையைக் கிழித்து, சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக்கொண்டு ,வெளியே நகரின் மையத்திற்கு சென்று ஓலமிட்டு, மனம் கசிந்து அழுதார் (எஸ்தா 4:1) என வேதம் கூறுகின்றது.

யோபு ஆண்டவருக்கு கூறிய பதில்... ஆகையால் என்னையே நொந்து கொள்ளுகின்றேன்.புழுதியிலும் சாம்பலி லும் இருந்து மனம் வருந்துகின்றேன் (யோபு 42:6) போன்ற பகுதிகளும் மனம் திரும்பும் பொருட்டே நடைபெற்றதை நினைவுபடுத்துகின்றன.

எனவே இச்சாம்பல் பூசப்படுவது மனிதன் மண்ணாய் இருக்கின்றான்.அவன் மண்ணுக்கே திரும்புவான் என்று நினைவு படுத்துகின்றது.அத்துடன் அவன் தீமைகளை எதிர் த்து போராடி பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டு மனம் மாற வேண்டும். நாற்பது நாளிலாவது தபக்கிருபைகள் செய்து இறைவனுடன் புதிய உறவுகளை வளர்த்துக்கொள்ள வேண் டும் என்பதை நினைவு படுத்துகின்றது.

இதை நன்கு உணர்ந்து நாம் எம்முள்ளே வைத்திருக்கும் பொய்,பொறாமை போன்ற பள்ளத்தாக்குகளை நிரப்பி , அகந்தை, ஆதிக்க உணர்வு ஆகிய மலைக்குன்றுகளை அழித்து,தீய செயல்கள், இச்சை போன்ற கோணலானவை களை நேராக்கி,

**அ.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

எரிச்சல் ,சண்டை,சர்ச்சைகள் போன்ற கரடு முரடுகளை சமதளமாக்கி, வறட்டுக்கௌரவச் சாக்கடை களைத் தூய்மையாக்கி , முறிந்து முடங்கிக்கிடக்கும் உறவுகளை மீண் டும் அன்பால் கட்டி இறைவன் அருளும் பாவ மன்னிப்பைப் பெற எம்மில் திருநீற்றைக் ஏற்றுக்கொள்வோம்.நாம் நெற் றியில் ஏற்றிக்கொள்ளும் இத் திருநீறு தவக்காலத்தின் ஊடாக மனம் மாறிய மைந்தர்களாக கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை அர்த்தமுள்ளதாக கொண்டாட ஆயுத்தமாக வேண்டும் என் பதை தான் நினைவுப்டுத்துகின்றது.

## பொன்சேகாவை விடுவிக்கக் கோரி

# 10 இலட்சம் கையெழுத்துத் திரட்டும் பணியில் எதிர்க்கட்சிகள்

இராணுவப் பொலிஸாரால் கைது செய்ய ப்பட்டு கடற்படையினரால் தடுத்து வைக்கப்ப ட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கான மேலும் ஒரு நடவடிக்கை யாக நாடு முழுவதிலும் 10 இலட்சம் கையெ முத்துகளை திரட்டும் பணியில் எதிர்கட்சிகள் இறங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன் னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு, இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோச லிச கட்சி, புதிய சிஹல உறுமய மற்றும் பெருந்தோட்டத் துறையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்கங்கள், புத்தி ஜீவிகள் அமைப்பு, ஜனநாயகக் குழுக்கள் ஆகிய அமைப்புகள் ஊடாக இந்த கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன் னெடுக்கப்படவுள்ளது.

இதற்கான விளக்கமளித்தலும் ஆரம்ப நிகழ்வும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவர் தலைமையில் இன்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கேம்பிரிட்ஜ் ரெரஸில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்; ஜெனரல் சரத் பொன்சேகா இந்நாட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர். அவர் 40 இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். யுத்தம் முடிவு காணப்படுவதற்கும் நாட்டில் அமைதி நிலவுவதற்கும் வழிவகுத்தவரும் அவர்தான். இதனை அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் கூட மறுக்க முடியாது. இவ்வாறான கௌரவமிக்க ஒருவரைத்தான் பொய்க் குற்றங்களைச் சுமத்தி கைது செய்து அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அடிப்படையற்ற விதத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஜெனரல் பொன்சேகாவை விடுவிப்பதற்கு எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் போராடி வருகின்றன. மக்கள் அவருக்கு ஆதரவாக எழுந்துள்ளனர். அவரது கைதினைக் கண்டித்து அடிப்படை உரிமை மீறல் மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் எமது நடவடிக்கைகளை மேலும் பலமுள்ளதாக்குவதற்கான நடவடிக்கையாக 10 இலட்சம் கையெழுத்துக்களை சேகரிப்பதற்கு எதிர்க்கட்சிகளாகிய நாம் தீர்மானித்திருக்கின்றோம்.

இதற்கமைய எதிர்க்கட்சிகளைச் சார்ந்த அரசியல் முக்கியஸ்தர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஊடாக இந்த கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் மக்கள் எந்தளவு ஆர்வமாக அல்லது உணர்வுபூர்வமாக உள்ளனர் என்பதை நாம் இந்நாட்டின் அரசாங்கத்துக்கும் நீதித்துறைக்கும் அதேபோல் சர்வதேசத்துக்கும் எடுத்துரைக்கவுள்ளோம்.

எம்மைப் பொறுத்தவரையில் ஜெனரல் சரத் பொன்சேகா உண்மையான சிறந்த இராணுவத் தளபதியாக செயற்பட்டுள்ளார். அவரது கைது அப்பட்டமானது. அவர் நடத்தப்பட்ட விதத்தையும் கண்டிக்கின்றோம். உடனடியாக அவர் விடுதலை செய்யப்படவேண்டும் என்றார். (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



இந்த உலகம் கோளைகளுக்காக ஏற்பட்டதல்ல: இங்கிருந்து நீ தப்பியோட முயற்சி செய்யாதே. வெற்றியா தேல்வியா என்று நீ கவனித்துக்கொண்டிருக்காதே. பரிபூரணமான தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு. வெற்றி பெறுவதற்காகவே பிறந்துள்ள மனம் உறுதியுடன் தானாகவே இணைந்து, விடாமுயற்சி செய்கிறது என்பதை உணர்ந்து கொள்...

வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் நடுவில் வாழ்ந்து வா, ஒரு குகையில் இருக்கும் போது சரி, அல்லது தூங்கும் போதும் சரி, யார் வேண்டு மானாலும் அமைதியாக இருக்க முடியும். மும்முரமான வேலை என்னும் சுழலில் நின்றபடி உனது குறிக்கோளாகிய ஆத்மனை நீ அடைய வேண்டும். ஆத்மனை நீ கண்டு பிடித்து விட்டால் எதுவுமே உன்னை அசைக்க முடியாது.

# பெல்ஜியத்தில் இடம்பெற்ற ரயில் விபத்தில் 20 பேர் பலி



(பிரசல்ஸ்)

பெல்ஜியம் நாட்டில் இரண்டு பயணிகள் ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 20 பேர் பலியாகினர்.

பெல்ஜியம் நாட்டின் ஹாலி நகரத்தருகே இரண்டு பயணிகள் ரயில்கள் நேற்று முன்தினம் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. இந்த விபத்தில் 20இற்கும் அதிகமான பயணிகள் பலியாகினர்.

இந்த விபத்தால் பிரசல்ஸ் நகருக்கும் பிரான்சின் பரிஸ் நகருக்கும் இடையேயான ரயில் போக்குவரத்து நேற்று முன்தினம் நிறுத்தப்பட்டது.

(6)

# இஸ்ரேல் போர் விமானங்கள் மீது லெபனான் இராணுவம் தாக்குதல்

(பேரூத்)

இஸ்ரேல் நாட்டுப் போர் விமானங்களை லெபனான் இராணுவ வீரர்கள் கடந்த திங்கட்கிழமை துப்பாக்கியால் சுட்டனர்.

இஸ்ரேல் நாட்டுக்குச் சொந்தமான 4 போர் விமானங்கள் தங்களது வான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து பறந்ததால் சந்தேகம் ஏற்பட்டதால் அவற்றின் மீது துப்பாக்கியால் சுட்டோம் என்று லெபனான் இராணுவத் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு லெபனான் மற்றும் மத்திய லெபனானில் உள்ள பெகாபள்ளத்தாக்கு ஆகிய இரு பகுதிகளிலும் இஸ்ரேல் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. இது போன்ற பல தடவை இஸ்ரேல் போர் விமானங்கள் அத்துமீறியுள்ளன எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அந்தப் போர் விமானங்களின் நிலைமை என்ன என்பது குறித்து அறிக்கையில் எவ்விதத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. இந்தத் தாக்குதலை அடுத்து இரு நாடுகளிடையே பதற்றம் நிலவுவதாக அங்கிருந்து வரும் அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

(6)

# குழந்தைகளின் மூளையைத் தாக்கும் ஆட்டிசம் நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பு

(லண்டன்)

குழந்தைகளின் மூளையைப் பாதிக்கும் ஒருவித நூதனமான நோய் ஆட்டிசம். இந்த நோய் பாதித்த குழந்தைகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கமாட்டார்கள். அவர்களை கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்.

ஆட்டிசம், ஆஸ்பெர்ஜர் போன்ற நோயுள்ளவர்களைக் கட்டுப்படுத்த தற்போது மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது மூளையின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் ஆக்சிடாசினி என்ற ஓமோன் அடங்கியது. இவற்றை மூக்கின் வழியாக உள்ளிழுத்து சுவாசிக்க வேண்டும்.

இவ்வாறு சுவாசிப்பதன் மூலம் ஆக்சிடாசின் ஓமோன் மூளைக்குச் சென்று ஆட்டிசம் நோயாளிகளின் செயற்பாட்டை அவ்வப்போது கட்டுப்படுத்தும்.

இதன் மூலம் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர் ஓரளவு சாதாரண நிலைக்குத் திரும்ப முடியும்.

எகிப்தில் நடந்த மத்திய தரை நரம்பிய மாநாட்டில் இது குறித்த ஆய்வுக்கட்டுரையை விஞ்ஞானி எலிகன் தாக்கல் செய்துள்ளார். (6)

# மேற்கு வங்கத்தில் மாவோ தீவிரவாதிகளின் தாக்குதலில் 20 இராணுவ வீரர்கள் பலி



(கொல்கத்தா)

மேற்கு வங்க மாநிலம் மேற்கு மிட்னாபூர் மாவட்டம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடமாட்டம் நிறைந்த பகுதியாகும்.

ஏராளமான கிராமங்களைத் தங்களது பிடிக்குள் வைத்துள்ள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபடும் அதிரடிப் படையினர் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தியும் வருகிறார்கள். இங்குள்ள பெல்பாரி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் மாவோயிஸ்ட்களின் கொட்டத்தை ஒடுக்க சில்தா என்னுமிடத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்தவாறு தினமும் இராணுவத்தினர் ரோந்து பணியில் ஈடுபடுவது வழக்கம். இந்த முகாமில் நேற்று முன்தினம் 51 இரா ணுவத்தினர் தங்கியிருந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இந்த இராணுவ முகாம் பகுதிக்கு திடீரென 25 மோட்டார் சைக்கிள்களில் ஏராளமான நவீன ஆயுதங்களுடன் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வந்தனர். முதலில் முகாம் பகுதியைச் சுற்றி நிலக்கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்த அவர்கள் இராணுவ முகாமை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டனர்.

இத்தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 20 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 9 பேர் தீயில் சிக்கி உடல் கருகி பரிதாபமாக பலியானார்கள். இராணுவ வீரர்களின் தாக்குதலில் 2 மாவோயிஸ்ட்களும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடந்த இடத்தில் இருந்து ஒரேயொரு இராணுவ வீரர் மட்டும் தப்பியோடி வந்துவிட்டார். மற்றவர்களின் கதி என்ன வாயிற்று என்பது தெரியவில்லை.

இந்த பயங்கர சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும் இராணுவ முகாம் இருந்த பகுதிக்கு பின்பூர் மற்றும் பெலபாரி இராணுவ முகாம்களில் இருந்து கூடுதல் படைகள் அனுப்பிவைக்கப்பட்டன. (6)



பாகிஸ்தானில் அந்நாட்டு அரசுக்கெதிராக இஸ்லாமாபாத்தில் உள்ள உயர் நீதிமன்றத்திற்கு வெளியே சட்டத் தரணிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# இந்தியர்கள் மீது நியூசிலாந்திலும் தாக்குதல்

(ஆக்லாந்து)


அவுஸ்திரேலியாவைத் தொடர்ந்து நியூசிலாந்திலும் இந்தியர்கள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதனால் வேலை பார்க்கும் இடங்களிலும் தங்கியிருக்கும் இடங்களிலும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என நியூசிலாந்தில் உள்ள இந்தியர்கள் சங் கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நியூசிலாந்தில் உள்ள இந்திய வம்சாவழியினரும் குறிவைத்துத் தாக்கப்படுகின்றனர். ஹிரேன் மோகினி என்ற டாக்சி ரைவர் அவரது டாக்சியிலே பயணம் செய்தவராலேயே குத்தப்பட்டு உயிரிழந்தார்.

இந்த தாக்குதல் 7ஆவது கோரக் கொலையாகும் என நியூசி லாந்து இந்தியர்களின் மத்திய சங்கச் செயலாளர் அசோக்பாய் கெய்வாலா கூறினார். (6)

# எம்.பி. பதவியை இராஜினாமா செய்ய சந்திரசேகரராவ், விஜயசாந்தி முடிவு?



(புதுடில்லி)

தெலுங்கானா ராஷ்டிரிய கட்சித் தலைவர் கே. சந்திரசேகர ராவ் தனது எம்.பி. பதவியை இராஜினாமா செய்வார் என தகவல் வெளியாகியுள்ளது. இன்று புதன்கிழமை அவர் புதுடில்லிக்கு வரவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தனித் தெலுங்கானா மாநிலம் அமைவதற்கு தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி என்ற பெயரில் அரசியல் கட்சி தொடங்கிய சந்திரசேகர ராவ் தனி மாநிலம் கோரிப் போராடி வருகிறார்.

தனித் தெலுங்கானா மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தும் நடிகை விஜயசாந்தியும் தல்லி (தாய்) தெலுங்கானா என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஆரம்பித்துப் போராடி வந்தார். பின்னர் சந்திரசேகரராவ் தலைமையிலான கட்சியில் சேர்ந்து மெதக் தொகுதியின் எம்.பி.யாக லோக்சபாவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கடந்த வருடம் டிசெம்பர் 23ஆம் திகதியன்று தனித் தெலுங்கானா பிரிவினை குறித்து பரிசீலிக்கப்படும் என உள்துறை அமைச்சர் அறிவிப்புச் செய்தார். அமைச்சரின் இரண்டாவது அறிக்கையால் மனக்கசப்புக்குள்ளான சந்திரசேகரராவ் தனது எம்.பி. பதவியை இராஜினாமா செய்து லோக்சபா சபாநாயகருக்கு அனுப்பினார். அவரது இராஜினாமாக் கடிதம் சட்ட நிபந்தனைகளின்படி இல்லாததினால் அது ஏற்கப்படவில்லை. தற்போது நீதிபதி ஸ்ரீகிருஷ்ணாவின் கருத்தறிந்து கட்சித் தலைவர் தனது எம்.பி. பதவிக்கு இராஜினாமா கடிதம் அளிக்க டில்லிக்கு வரவுள்ளதாகத் தெரிகிறது.

லோக்சபா சபாநாயகர் மீராகுமாரை இன்று சந்தித்து சந்திரசேகரராவ் தனது இராஜினாமா கடிதத்தை கொடுப்பார் எனத் தெரிகிறது.

அவரைத் தொடர்ந்து அக்கட்சியின் மெதக் தொகுதியின் பெண் எம்.பி.யும் நடிகையுமான விஜயசாந்தியும் தனது பதவியை இராஜினாமா செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(6)

# தவிட்டில் இருந்து எரிவாயு கண்டுபிடிப்பு

(சிதம்பரம்)

தவிட்டில் இருந்து எரிவாயு எடுக்கும் முறையை சிதம்பரம் பொறியியல் கல்லூரியில் படிக்கும் மாணவர் கண்டுபிடித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் நெய்வேலி பிளாக் 84 முருகன்கோவில் தெருவைச் சேர்ந்த நாகராஜன். ஊனமுற்ற இவர் அண்ணாமலை பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் எம்.எஸ்.சி. சொப்ட்வெயர் இன்ஜினியரிங் இறுதியாண்டு படித்து வருகிறார். தற்போது சிதம்பரத்தில் உறவினர் வீட்டில் தங்கி படித்து வரும் நாகராஜன் சிதம்பரம் பகுதியில் அதிக அளவில் கிடைக்கும் தவிட்டில் இருந்து எரிவாயு கண்டுபிடிக்க முடியுமா என சோதனையில் இறங்கினார். அதன் பலனாக எரிவாயு கண்டுபிடித்து வெற்றி கண்டுள்ளார். இரண்டு பக்கம் அடைக்கப்பட்ட தகர டப்பாவில் தவிடு போட்டு மூடி அதை சூடுபடுத்தியவுடன் டப்பாவில் ஒரு பக்கத்தில் அமைந்துள்ள சிறிய குழாய் வழியாக காஸ் வெளியேறியது.

அதை தீக்குச்சியால் கொளுத்திய போது நீலக்கலரில் எரிந்தது. இந்த எரி வாயுவை சிலிண்டரில் அடைத்து அடுப் பெரிக்கப் பயன்படுத்த முடியும் என்றும் நாக ராஜன் தெரிவித்தார். (6)

# சதமடித்து அசத்தினர் லக்ஸ்மன், தோனி; இரண்டாவது டெஸ்டில் இந்தியா ஆதிக்கம்

(கொல்கத்தா)

லக்ஸ்மன், தோனியின் சிறப்பான இணைப் பாட்டத்தின் மூலம் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை மாத்திர மிழந்து 643 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளை யாடுகின்றது.

இதில் கடந்த வாரம் நாக்பூரில் நடை பெற்ற முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் தீர்க்கமான இரண்டாவ தும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 14 ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங் ஸில் 296 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட் டுக்களையுமிழந்தது.


தொடர்ந்து தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 342 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 384 ஓட்டங்களை எடுத்த போது 6 ஆவது விக் கெட்டையிழந்தது.

இதில் அமித் மிர்ஷா 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க அணித்தலைவர் தோனி களமிறங்கினார்.

மறுமுனையில் பொறுப்பாகத்துடுப் பெடுத் தாடிய வி.வி.எஸ்.லக்ஸ்மன் 107 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்


வி.வி.எஸ்.லக்ஸ்மன்

டத்தின் மூலம் இந்திய அணி வலுவான நிலை யை அடைந்தது.

இதில் அணித்தலைவர் தோனி 77 பந்து களில் அரைச்சதத்தைக்கடக்க இந்திய அணி 500 ஓட்டங்களை கடந்தது.

இந்த ஜோடியை பிரிக்க தென்னாபிரிக்க அணி பல மாற்றங்களை மேற்கொண்ட போதும் பலனளிக்காமல் போனது.

இதில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 203 பந்து களில் தனது 15ஆவது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

மறு முனையில் அணித்தலைவர் மகேந் திரசிங் தோனியும் 158 பந்துகளில் தனது 4 ஆவது டெஸ்ட் சதத்தைக்கடக்க இந்திய அணி 600 ஓட்டங்களைத் தொட்டது.

இந் நிலையில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 643 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 260 பந்து களில் (16 பவுண்டரிகள் அடங்கலாக) 143 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 187 பந்துகளில் (12 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் அடங்கலாக) 132 ஓட்டங்களை யும் ஆட்டமிழக்காமல் எடுத்து 7 ஆவது பிரிக் கப்படாத விக்கெட்டுக்காக 259 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

முன்னதாக வீரேந்திர சேவாக் 165 ஓட்டங் களையும் சச்சின் டெண்டுல்கர் 106 ஓட்டங் களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மோர்னி மோர்கல் 2 விக் கெட்டுக்களையும் டயஸ் ஸ்ரையன், ஹரிஸ் மற்றும் டுமினி ஆகியோர் தலா ஒருவிக்கெட் டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை யிலிருந்த தென்னாபிரிக்க அணி 2 ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 06 ஓட்டங்களை எடுத்திருந்தது.


மகேந்திரசிங் தோனி

இதில் அணித்தலைவர் சிமித் 05 ஓட்டங் களையும் பீற்றர்சன் ஒரு ஓட்டத்தையும் ஆட்ட மிழக்காமல் எடுத்தனர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 10 விக் கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 341 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

இந்நிலையில் நான்காம் நாள் ஆட்டம் இன் றாகும்.

# குப்தில்,மக்குலம் ஜொலிப்பு; நியூசிலாந்து அணி பலம்

(ஹமில்ரன்)

குப்தில், மக்குலத்தின் சிறப்பான சதங்கள் மூலம் நியூசிலாந்து அணி முதலாவது இன் னிங்ஸில் 7 விக் கெட்டுக்களையிழந்து 553 ஓட்டங் களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத் தியது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடி பில் ஒரு விக்கெட்டையிழந்து 87 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரேஒரு இருபது-20 போட்டி 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொட ரில் விளையாடுகின்றது.

இதில் ஒரேஒரு இருபது-20போட்டி யில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி தொடர்ந்து நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொட ரை 3:0 என்ற கணக்கில் முழுமை யாகக் கைப்பற்றியது.


இந்நிலையில் முதலாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம்ஹமில்ரனில்ஆரம் பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்ற பங்களா தேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித் தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப் பெடுத் தாடிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக் களையிழந்து 258 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம்நாளான


குப்தில்


மக்குலம்

நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி குப்தில்-மக்குலம் ஜோடியின் பலமான இணைப்பாட்டத் தின் மூலம் முதலாவதுஇன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களையிழந்து 553 ஓட்டங்களைஎடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

இதில் குப்தில் 310 பந்துகளில் (18 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்க லாக) 189 ஓட்டங்களையும் மக்கு லம் 272 பந்துகளில் (17 பவுண்டரி கள், 03 சிக்ஸர்கள் அடங்கலாக) 185 ஓட்டங்களையும் இங்ராம் 42,ரெய் லர் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரபெல் ஹுசைன் 5 விக்கெட் டுக்களையும் இஸ்லாம், அணித்தலைவர் சகிப் அல்ஹசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை யும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 87 ஓட்டங் களை எடுத்திருந்தது.

இதில் சகாப்ட் ஹுசைன் 56 ஓட் டங்களையும் யுனைட் சிட்டிக் 03 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்ததுடன் இம்ரூல் ஹயில்ஸ் 28 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இப் போட்டியின் மூன் றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பார்முலா கார் பந்தயத்தில் நடிகர் அஜித் ஏழாவது இடம்

(சென்னை)


6 ஆண்டுகளுக்கு பின்னர் கார் பந்தயத்தில் நடிகர் அஜித் குமார் பங்கேற்றார். எம்.ஆர்.எப்.பார்முலா 1600 பிரிவில் கலந்து கொண்டார்.

முதல் பந்தயத்தில் அவரது காரில்ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக விலகினார். இதனால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்து ஆவே சப்பட்டனர்.

இதனால் 2 ஆவது பந்தயத் தில் (15 ரவண்டு) பங்கேற்றார். இதில் அஜீத்குமார் 7ஆவது இடத்தை பிடித்தார்.

கார்ப்பந்தயத்தில் பங்கேற்க வந்த நடிகர் அஜீத்தை பார்க்க ரசிகர் குவிந்திருந்தனர். போட்டியில் வெற்றி பெறாவிட்டாலும் ரசிகர்களின் மனதை அஜீத் வென்றுவிட்டார்.

எம்.ஆர்.எப்.பார்முலா 1600



பிரிவின் 2 பந்தயத்திலும் சென்னை வீரர் அஸ்வின் வெற்றிபெற்றார். முதல் பந்தயத்தில் கிறிஸ்வுட்டன் 2 ஆவது இடத்தையும், பார்த்தீவ் சுரேஸ்வரன் மூன்றாவது இடத்தை யும் இரண்டாவது பந்தயத்தில் கவுரவ்கில் 2 ஆவது இடத்தையும், அர்ஜுன் பாலு 3 ஆவது இடத்தை யும் பிடித்தனர்.

# மூன்று தொடர்களில் விளையாட அப்ரிடிக்கு தடை விதிக்கவேண்டும்

## பாகிஸ்தான் பாராளுமன்றம் பரிந்துரை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் அப்ரிடி கடந்த மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியின் போது பந்தை பல் லால் கடித்து சேதப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து போட்டி நடு வர் ரஞ்சன் மடுகல்ல இருபது- 20 போட்டியில் விளையாட அப்ரி டிக்கு தடை விதித்தார். பாகிஸ்தான் வீரர்கள் பலரும் அப்ரிடியின் செயலுக்கு கண் டனம் தெரிவித்தனர். இதைத் தொடர் ந்து அவர் மீது விசாரணை நடத்தப் பட்டது. இதற் கிடையே அப்ரிடிக்கு குறைந்த பட்சம் மூன்று தொடரிலா வது விளையாட தடை விதிக்க வேண் டும் என்றுபாகிஸ்தான் கிரிக்கெட் சபை க்கு அந்நாட்டு பாராளுமன்ற விளை யாட்டுக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இது தொடர்பாக தாரிக் அசிம் என்ற எம்.பி. கூறும்போது, அப்ரிடி பந்தைக் கடித்தசெயல்ஏற்றுக்கொள்ளமுடியாது. இந்த செயலுக்காக அவருக்கு 5 ஆண்டுகள் கூட தடைவிதிக்கலாம் என்றார். இந்த குழுவின் அறிக்கை யின் அடிப்படையின்பாகிஸ்தான்கிரிக் கெட் சபை விரைவில் அப்ரிடி மீது நட வடிக்கை எடுக்கும் என்று தெரிகிறது.

# கல்வித் திணைக்கள அதிகாரிகள் மூவர் மாகாணக் கல்வி அமைச்சினால் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கல்வித்திணைக்களங்களின் அதிகாரிகள் சிலர் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிய சண்முகராஜா ரவீந்திரநாதன் யாழ். கல்வி வலய திட்டமிடற் பணிப்பாளராகவும் , தீவக கல்வி வலயத்தில் திட்டமிடற் பணிப்பாளராகக் கடமையாற்றிய சிவஞானம் மகேஸ்வரன், தென்மராட்சி கல்வி வலயத் திட்டமிடல் பணிப்பாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை தீவக கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் மற்றும் மாணவர் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.குவிந்தன் தீவக வலய பிரதிக் கல்வித் திட்டமிடல் பணிப்பாளராகத் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

இவர்களது இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இவர்களிற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,14)

# அரசியல் நோக்கங்களை கொண்டு மகா சங்கப் பேரவை நடத்தக்கூடாது மல்வத்த பீடாதிபதி

(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மகா சங்கப் பேரவை நடத்தப்படமாட்டாது என கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரசியல் கட்சிக்கு ஆதரவு திரட்டும் நோக்கிலோ அல்லது எதிர்ப்பினை வெளியிடும் நோக்கிலோ இந்தக் கூட்டம் நடத்தப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். மகா சங்கத்தினர் தற்போது நாட்டில் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் நாட்டு நிலைமைகள் குறித்து இந்த மாநாட்டில் கலந்துரையாடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மூன்று பீடங்களைச் சேர்ந்த மாநாயக்க தேரர்களின் பிரசன்னத்துடன் நாளை 18ஆம் திகதி கண்டியில் இந்த விசேட சங்க சம்மேளனம் நடைபெறவிருந்தது. மூன்று பீடங்களையும் சேர்ந்த பௌத்த பிக்குகள் அண்மையில் இவ்வாறான ஓர் பாரியமாநாட்டை நடத்தவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. பௌத்த பிக்குகளின் நலனை அடிப்படையாக கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுவதாக இருந்தது என அவர் தெரிவித்தார். (ச-5)

## ஊடகவிய...

ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படும் போது முறையான அடிப்படையில் கைது செய்யுமாறு கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

இதனையடுத்து ஜனாதிபதி இவ்வாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். ஊடகத்துறை அமைச்சர் என்ற அடிப்படையில் ஓர் ஊடகவியலாளர் கைது செய்யப்படும்போது அதனை நான் தெரிந்திருக்க வேண்டும். அது எனது பொறுப்பும் கடமையும் எனக் கூறினார். (ச-9)

## பிரபாகரன்...

தித்து வருவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

கடந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் விடுதலைப்புலிகள் வீழ்த்தப்பட்ட போதிலும் தமிழீழம் குறித்த அவர்கள் கனவு கலையவில்லை.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காகவே இராணுவ வீரர்கள் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர். போரிடுவதற்காக அல்ல. நமது நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்திற்கு உள்ளது. ஏதாவது ஒரு குழுவினர் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்தால் அதையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ச-5)

## பாதுகாப்புச்...

மயப்படுத்தும் நோக்கில் இந்தக் கண்காட்சியில் ஈடுபட்டுள்ள ஆயுத உற்பத்தியாளர்களிடம் இருந்து புதிய யுத்த தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளிலும் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ச-5)

## இலங்கையில் அரசியல் குழப்ப...

குறித்து இந்தியாவின் மத்திய அரசு மிகுந்த கவலையடைந்திருப்பதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு மக்கள் வழங்கிய ஆணையை நாட்டு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதை விடுத்து தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துவதில் மகிந்த ஆர்வம் காட்டுவதையிட்டு இந்தியா மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் தமிழ் மக்களுக்கான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று மகிந்தவின் முதலாவது பதவிக் காலத்திலேயே இந்தியா வலியுறுத்தி வந்தபோதும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காத மகிந்த தற்போதும் 2-வது பதவிக் காலத்திலும் தேர்தலில் வெற்றி பெற்று 3 வாரங்களாகியும் நாட்டில் முக்கிய பிரச்சினையான இனப்பிணக்குத் தொடர்பில் தனது தீர்வுத் திட்டம் தொடர்பில் எந்த அறிக்கையும் விடுக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

## பௌத்த தேரர்களின் மாநாடு...

இதேவேளை நேற்றுக் கண்டி மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை வெளிவிவகார அமைச்சர் றோகிதபோகொல்லாகம சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதன்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தையின்போது நாட்டின் சட்டம் அமுல்படுத்தப்படுவதனை ஜனாதிபதியினால் கூட தடுத்து நிறுத்த முடியாது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் நாட்டின் சட்டதிட்டங்கள் குறித்து உலக நாடுகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மட்டுமன்றி அண்டை நாடுகளிலும் இதேமாதிரியான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா விவகாரம் தொடர்பில் உலக சமூகத்திற்கு போதிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. சட்டம் அமுல்படுத்தப்படுவதனை எந்தவொரு தலைவரினாலும் தடுத்து நிறுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இலங்கையில் ஜனாதிபதித்...

வும் வன்முறைகள் நிறைந்ததாகவிருந்தது.

எனவே தேர்தலை முழுமையாகக் கருதும்போது அது ஜனநாயக நடைமுறைகளை மீறியதாகவே கருதப்படுகின்றது. முன்னைய தேர்தல்களில் அவதானிக்கப்பட்ட பல பிரச்சினைகளே நடைபெற்ற முடிந்த தேர்தலிலும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தேர்தல் ஆணையாளரினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினை. இது தொடர்பில் உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

வாக்களிப்பதற்கான நடைமுறைகள் , வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளுக்கான தயார்ப்படுத்தல்கள் போன்றவை முன்னேற்றமானவையாக இருந்தது.

தேர்தல் ஆணையாளரும் அவரின் பணியாளர்களும் சிறப்பாகச் செயற்பட்டிருந்தனர். அவர்கள் அனைத்து மக்களினதும் வாக்களிப்பை உறுதிப்படுத்தியிருந்தனர். தேர்தலுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகளும் பிரதான எதிர்க்கட்சிகளின் வேட்பாளர் கைது செய்யப்பட்டது நாட்டில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஆனால் சட்டம் , ஒழுங்கு அங்கு பின்பற்றப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நாடாளு...

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பாதுகாப்பை நீக்குவது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## ஜனாதிபதித் தேர்தல் முடிபுக...

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட சகல வாக்குகளையும் மீண்டும் எண்ணுமாறும் ஜனாதிபதி நியமனத்தை இரத்துச் செய்யுமாறும் கோரி நேற்று உயர் நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகா சார்பில் சமரட்ண அசோசியேட் சட்ட நிறுவன்த்தினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் முதலாவது பிரதிவாதியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெயரிடப்பட்டுள்ளதோடு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சகலவேட்பாளர்கள், தேர்தல்கள் ஆணையாளர் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ,ஹற்சன் சமரசிங்க , ஹாலிங்க இந்திரதிஸ்ஸ உட்பட 26 பேர் பிரதிவாதிகளாக உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்த மனு உயர் நீதிமன்றில் நீதிமன்றப் பதிவாளர் எம்.எம்.ஜெயசேகரவிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க ,சுனில் ஹந்து நெற்றி , ஜோன் அமரதுங்க , ரவிகருணாநாயக்க மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணிகளும் அவர்களுடன் சென்றிருந்தனர். பயமுறுத்தல் ,ஆயுத அச்சுறுத்தல் , இலஞ்சம் சார்ந்த சம்பவங்கள் , தேர்தல் சட்டங்களை மீறியமை , ஊழல் மற்றும் மோசடிகளை அடிப்படையாக வைத்து இந்த மனு தாக்கல்செய்யப்பட்டது.

103 ஆயுத அச்சுறுத்தல்கள் , பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையைத் தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்திப் பல்வேறு மட்டத்தில் வாக்காளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த 4 சம்பவங்கள் , தேர்தல் சட்டங்களை மீறிய 41 சம்பவங்கள் மற்றும் மனுதாரரின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் 4 பொய்யான குற்றச்சாட்டுக்கள் என்பன மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் குண்டர்களினால் மாத்தளை , இரத்தினபுரி , புத்தளம் , குருநாகல் , கம்பஹா , அநுராதபுரம் , பொலநறுவை , கொழும்பு ஆகிய மாவட்டங்களில் வாக்கு எண்ணும் நிலையங்களில் மனுதாரரின் பிரதிநிதிகளைத் திருப்பி அனுப்பிய சம்பவங்கள் பலவும் இந்த மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேர்தல் தினத்திற்குச் சில நாள்களுக்கு முன்னர் மனுதாரர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாட்டைப் பிரிக்கும் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டதாக முதலாவது பிரதிவாதி குறிப்பிட்டதாகவும் மனுதாரர் ஜனாதிபதியாக வெற்றி பெற்றாலும் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படும் எனவும் முதலாவது பிரதிவாதியின் பிரதிநிதிகளால் அரச ஊடகங்கள் ஊடாக தேர்தல் தினத்தன்று மாலை 4 மணிவரை பிரசாரப்படுத்தப்பட்டதாகவும் அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே முதலாவது பிரதிவாதியின் நியமனத்தினை செல்லுபடியற்றதாக்கி மனுதாரர் ஜனாதிபதிப் பதவிக்குத் தகுதியானவர் என அறிவிக்குமாறும் இந்த மனுவில் மூலம் நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது. (ச-5 ,9 ,14)

Computer Engineer -USA
ICTA வழங்கும் Scholorship Per Module ~~Rs.15000~~ Rs.3800
கற்கும் அனைவருக்கும் Free Courses
ICDL-Computer Driving Lincence), HARDWARE, A+,N+ (ComTIA)
MCS Supported By UNDP/JRRP
விபரங்களுக்கு நேரில் இச்சலுகை 19.02.2010 வரை மட்டுமே
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம், Bus Root - 764 T.P-772395895

# மரண அறிவித்தல்

# வேலாயுதம் நாகேசு

**(உரிமையாளர் S.P.N அன் கொம்பனி)**

**கெய்சர் வீதி, கொழும்பு-11**



நயினாதீவை பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரம் புங்குடுதீவை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வாழ்ந்து வந்தவருமான வேலா யுதம் நாகேசு 13.02.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் நாகமுத்து (நயினை) தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் முத்துவேலு தம்பதிகளின் (புங்குடுதீவு) அன்பு மருமகனும், அமரர் இராசமணி (ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை) அவர்களின் அருமைக் கணவரும் கீதா, கிருபாகரன், மாலா, திபாகரன், ஜீவா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

சதாரூபன் (ஆசிரியர், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), தர்சினி, நாகலிங்கம், சிவமலர், சந்திரசேனன் (சீலன்), கீர்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீப், தீபிகா, சங்கீத், கீர்த்தனா, அஸ்வின், நிவேதா, ரஜிதன், நகியா, அபிசா, தர்விதன், நயன், தருணிகா ஆகியோரின் அன்புப்பேரனும்,

அமரர்களான நாகம்மா, சின்னம்மா, நல்லையா, சிவக்கொழுந்து, பொன்னம்மா மற்றும் கண்மணி, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் களான தம்பையா, சின்னத்துரை, முத்தையா, ராஜரத்தினம், சண்முகலிங்கம் மற்றும் கமலாதேவி, பொன்னையா, அமரர்களான செல்வநாயகம், ராஜேஸ்வரன் மற்றும் தனபாலசிங்கம் (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17.02.2010 இன்று புதன்கிழமை இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு காலை 10.00 மணியளவில் இறுதிக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

131A 1/2 புதுச்செட்டி வீதி,
கொழும்பு-13
T.P.:0777 410696

தகவல்:-
குடும்பத்தினர்.
பிரபு (மகன்)

(C-4459)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.